بسم الله الرحمن الرحیم    نحمدہ ونصلی علی رسولہ الکریم    وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 2

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

29 ஜமாதில் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி 14 ஸுலஹ் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
14 ஜனவரி 2021


## அல்லாஹ்வின் கட்டளை

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ
بِالْقِسْطِ شُهَدَاءَ لِلّٰهِ وَلَوْ عَلَىٰ
أَنْفُسِكُمْ أَوِ الْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ

நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாயிருங்கள்.

(4:136)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**சமுதாயம் தனது நிலையை தானே மாற்றிக் கொள்ளாதவரை இறைவன் எந்தவொரு சமுதாயத்தின் நிலையையும் மாற்றுவதில்லை இறைவனிடத்தில் அடைக்கலம் தேடுங்கள். தொழுகைகளை முறையாகவும், ஒழுங்காகவும் தொழுங்கள். தொழுகைகள் மன்னிக்கப்படுவதில்லை. நபிமார்களுக்கும் சலுகை கிடையாது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுதல்

திருக்குர்ஆனில் أَطِيعُوا اللّٰهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ مِنْكُمْ என்று கட்டளை உள்ளது. இதில் ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படும்படி தெளிவான கட்டளை உள்ளது. அரசாங்கம் مِنْكُمْ என்பதில் அடங்காது என்று ஒருவர் கூறினால் அது அவருடைய தெளிவான தவறாகும். ஷரீஅத்திற்கேற்ப அரசாங்கம் செயல்பட்டால் அது مِنْكُمْ என்ற வட்டத்தில் அடங்கும். நம்மை எதிர்க்காதவர் நம்மை சார்ந்தவர் ஆவார். அரசாங்கத்திற்கு கட்டுப்பட வேண்டும். மேலும் அவர்களுடைய கூற்றுக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் போன்ற விஷயங்கள் திருக்குர்ஆனின் கட்டளைகளிலிருந்து நிரூபணமாகின்றன.

### நற்பேறுக்கான வழிகளை மேற்கொள்ளுங்கள்

நற்பேறு மற்றும் இறையச்சத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நற்பேறுக்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஏதாவது பயன் கிடைக்கும். إِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوا مَا بِأَنْفُسِهِمْ அதாவது சமுதாயம் தனது நிலையை தானே மாற்றிக் கொள்ளாதவரை இறைவன் எந்தவொரு சமுதாயத்தின் நிலையையும் மாற்றுவதில்லை. மக்கள் இறைவன் பக்கம் திரும்புவதும், தொழுவதும், ஸக்காத் கொடுப்பதும், உரிமைகளை பறிப்பது மற்றும் தீமைகளிலிருந்து விலகி இருப்பதும் அவசியமாகும். சில முறை ஒருவர் செய்யும் தீமை முழு நகரம் மற்றும் குடும்பத்தின் அழிவிற்கும் காரணமாகி விடுகின்றது என்பது தெளிவாக நிரூபணமாகி உள்ளது. தீமைகளை விட்டு விடுங்கள். ஏனெனில் அவை அழிவிற்கு காரணியாகும். தொழுகைகளை முறையாக நிறைவேற்றுங்கள். இறைவனிடத்தில் அடைக்கலம் தேடுங்கள். தொழுகைகளை முறையாகவும், ஒழுங்காகவும் தொழுங்கள். சில முறை மக்கள் ஒரே நேரத்தில் தொழுகைகளை தொழுகின்றனர். தொழுகைகள் மன்னிக்கப்படுவதில்லை. நபிமார்களுக்கும் கூட சலுகைகள் வழங்கப்படவில்லை. ஒரு ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு புதிய கூட்டத்தினர் வந்தனர். மேலும் தொழுகைகளை மன்னிக்கும்படி வேண்டினர். அதற்கு எந்த மார்க்கத்தில் செயல் இல்லையோ அந்த மார்க்கம் ஒன்றுமே அல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 238–240 – 2018 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

பெரும் சிறப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார்கள். தொழுகைகளை பேணி வந்தார்கள். திருக்குர்ஆன் ஓதுவதிலும், தஹஜ்ஜுத் தொழுகையை பேணுவதிலும் கவனத்துடன் செயல்பட்டு வந்தார்கள். மர்ஹூமா பொறுமைசாலியாகவும், நன்றியுடைய பெண்மணியாகவும் திகழ்ந்து வந்தார்கள். கஷ்டமான நேரத்திலும் ஒருபோதும் முறையீடு செய்தது கிடையாது. இறைவனது திருப்தியில் எப்போதும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள். ஏழைகளை பராமரிப்பவராக இருந்தார்கள். எவருக்கும் எந்த துன்பமும் கொடுத்தது கிடையாது. எப்போதும் அவர்களுக்கு உதவி செய்ய தயாராக இருந்தார்கள். மர்ஹூமா கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதிலும், கலப்பற்ற தன்மையிலும் முன்னனியில் இருந்து வந்தார்கள்.

அல்லாஹ் அவர்களின் பிள்ளைகளையும், அவர்களின் சந்திகளையும் அன்னாரின் சிறப்புகளுக்கு உரியவர்களாக ஆக்குவானாக. மர்ஹூமாவுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

அடுத்த ஜனாஸா மன்சூரா புஷ்ரா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் மருத்துவர் லத்தீஃப் குரைஷி சாஹிபா அவர்களின் தாயார் ஆவார்கள். மர்ஹூமா நவம்வர் மாதம் 6 ஆம் தேதி 97 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியின் சந்ததிகளைச் சார்ந்தவராக இருந்தார்கள். இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் முன்ஷி ஃபயாஸ் அஹ்மது சாஹிப் கபூர்தல்வி சாஹிப் அவர்களின் மகள்வழிப் பேத்தி ஆவார்கள். ஹஸ்ரத் ஷேக் அப்துர் ரஷீது சாஹிப் அவர்களின் மகன்வழிப் பேத்தி ஆவார்கள். இருவரும் சஹாபி ஆவார்கள். சிறு வயதில் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களுடன் மர்ஹூமாவிற்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. மர்ஹூமாவிற்கு நினைவாற்றல் குறைந்திருந்தபோதிலும் இறுதி மூச்சு வரை திருக்குர்ஆனை ஓதுவதை ஒருபோதும் மறந்து விடவில்லை. குத்பா ஜுமுஆவையும் MTA வில் தொடர்ச்சியாக கேட்டு வந்தார்கள். ஒரு நல்ல நன்றியுணர்வுமிக்க சான்றோராக அன்னார் திகழ்ந்தார்கள். இறை அருளால் மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று மர்ஹூமா டாக்டர் லத்தீஃப் குரைஷி சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். கடந்த நாட்களில் குரைஷி சாஹிப் மற்றும் அன்னாரின் மனைவி ஷவ்கத் கோகர் சாஹிபா அவர்களும் மரணமடைந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் உயிருடன் இருந்தவரை அதாவது மருத்துவர் அவர்களும், அன்னாரின் மனைவியும் மர்ஹூமாவிற்கு மிகவும் தொண்டாற்றி இருக்கின்றார்கள். எவ்வாறிருப்பினும் மர்ஹூமா உயிருடன் இருக்கும்போதே அவர்கள் இருவரும் மரணித்து விட்டார்கள். மர்ஹூமாவின் மகள்வழிப் பேத்தி அஸ்மத் மிர்ஸா சாஹிபா அவர்கள் எழுதுகின்றார்கள்: எனது தந்தைவழிப் பாட்டி உண்மையிலேயே நம்பிக்கை கொண்ட பெண்மணியாகவும், அஹ்மதிய்யத் மற்றும் கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு கொண்ட பெண்மணியாகவும் திகழ்ந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவ மன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. ஜுமுஆவிற்குப் பிறகு இவர்கள் அனைவரின் ஜனாஸா தொழுகையை நான் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். (தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

**எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபாவும், மருமகனுமான அபூதுராப் ஹஸ்ரத் அலி அல் முர்தஸா (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 டிசம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஃபதஹ்** மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த குத்பாவிலிருந்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இடம் பெற்று வருகின்றது. இன்றும் அது தொடர்பாகவே நான் எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சகோதரத்துவம் தொடர்பாக அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை இரண்டு முறை தனது சகோதரராக குறிப்பிட்டுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுக்கு மத்தியில் மக்காவில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். பின்னர் அன்னார் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாருக்கு மத்தியில் ஹிஜ்ரத்திற்குப் பிறகு மதீனாவில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், اَنْتَ اَخِيْ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ (அதாவது நீர் இவ்வுலகிலும் மறு உலகிலும் எனது சகோதரர் ஆவீர்) என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 88 – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஹல் பின் ஹனீஃப் (ரலி) ஆகியோருக்கு மத்தியில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 16 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சகோதரத்துவ பந்தம் எப்போது ஏற்பட்டது? என்பது தொடர்பாக வரலாற்றில் இவ்வாறு குறிப்பு வந்துள்ளது. அதாவது இரண்டு முறை சகோதரத்துவ பந்தம் ஏற்படுத்தப்பட்டது. சஹீஹ் புகாரியின் விளக்கவுரையில் அல்லாமா கிஸ்தலானீ கூறுகின்றார்கள்: சகோதரத்துவ பந்தம் இரண்டு முறை ஏற்பட்டது. முதல் முறை ஹிஜ்ரத்திற்கு முன்பு மக்காவில் முஹாஜிர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டது. அதில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கிடையிலும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கிடையிலும், ஹஸ்ரத் சுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களுக்கிடையிலும், மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் தமக்கிடையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வருகை தந்தபோது முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாருக்கு மத்தியில் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்களின் வீட்டில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

இப்னு சஅத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 100 சஹாபாக்களுக்குள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அதாவது 50 முஹாஜிரீன்கள் மற்றும் 50 அன்ஸாருக்கு மத்தியில் ஏற்படுத்தினார்கள். (இர்ஷாத் அஸ்ஸாரி ஷரஹ் சஹீஹ் புகாரி தொகுதி 8 பக்கம் 410,411 ஹதீஸ் எண் 3937 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பதர் போர் உட்பட தபூக் போரை தவிர மற்ற அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். தபூக் போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை குடும்பத்தை பாதுகாக்கும் பொறுப்பில் நியமித்திருந்தார்கள். (அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 92 – 2016 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஃலபைன் அபூ மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சார்பாக கொடியை ஏந்தி நின்றார்கள். ஆனால் போருக்கான நேரம் வரும்போது ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் அவர்கள் கொடியை பெற்றுக் கொள்வார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 93 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

உஷைரா என்ற போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதில் வுலா மாதம் நடைபெற்றது. வரலாறு மற்றும் வாழ்க்கை புத்தகங்களில் இந்த போருக்கு உஷைரா போர் என்ற பெயர் மட்டுமல்லாமல் ஸுல் உஷைரா, ஸாத்துல் உஷைரா மற்றும் உஸைரா ஆகிய பெயர்களும் கூறப்பட்டுள்ளன. உஷைரா என்பது ஹிஜாஸிலுள்ள யன்பஉ மற்றும் துல் மர்வா என்ற இரண்டு இடங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள ஒரு கோட்டையின் பெயராகும்.

இது தொடர்பான விளக்கத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதில் வுலா மாதத்தில் மக்கத்து குரைஷிகள் சார்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு குழுவுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மேலும் தமக்கு பிறகு தம்முடைய பால்குடி சகோதரரான அபூ சல்மா பின் அப்துல் அஸத் அவர்களை அமீராக நியமித்தார்கள். இந்தப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பல இடங்களை சுற்றி வந்து இறுதியில் கடற்கரை ஓரத்தில் யன்பஉ என்ற இடத்திற்கு அருகில் உஷைரா என்ற இடம் வரை சென்றடைந்தார்கள். அப்போது குரைஷிகளுடன் போர் நிகழவில்லை என்றாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ முத்லிஜ் கோத்திரத்துடன் ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டார்கள். பின்னர் திரும்பி வந்து விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 329)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இந்த போரில் பங்கு பெற்றிருந்தார்கள். இது தொடர்பாக முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஸாத்துல் உஷைரா போரில் நானும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் பயண நண்பர்களாக இருந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இடத்திற்கு சென்று விட்ட பிறகும், அங்கு தங்கியபோதும் நாங்கள் பனூ முத்லிஜ் மக்களை இவ்வாறு கண்டோம். அதாவது அவர்கள் பேரீத்தம் பழ தோட்டங்களில் தனது ஒரு நீரூற்றில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் என்னிடம், அபூ யக்ழான் அவர்களே! உங்களது கருத்து என்ன? நாம் அவர்களிடம் செல்வோமா? அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று பார்ப்போமோ? என்று கேட்டார்கள். எனவே நாங்கள் அவர்களிடம் சென்றோம். அவர்களின் பணிகளை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தோம். பின்னர் எங்களுக்கு தூக்கம் வந்து விட்டது. எனவே நானும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அங்கிருந்து சென்று விட்டோம். பேரீத்தம் பழங்களுக்கு மத்தியில் மண்ணிலேயே கிடந்து உறங்கி விட்டோம். இறைவன் மீது ஆணையாக! எங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவரும் எழுப்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது பாதங்களால் தொட்டு எழுப்பினார்கள். அப்போது எங்களது உடலில் மண் படிந்திருந்தது. அந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் உடலில் மண் இருப்பதைப் பார்த்து, அபூ துராபே! என்று கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உங்களுக்கு மிகவும் மோசமான இருவரைப் பற்றி கூறட்டுமா? என்று கேட்டார்கள். அபூ துராப் பற்றிய குறிப்பு கடந்த குத்பாவிலும் இவ்வாறு கூறப்பட்டிருந்தது. பள்ளிவாசலில் அன்னார் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அதனால் மண் படிந்திருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ துராப்! அபூ துராப்! என்ற பெயரால் அழைத்தார்கள். அந்த நேரத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த பெயரை வைத்திருக்கலாம். அல்லது பிற்காலத்தில் வைத்திருக்கலாம். அல்லது இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு அழைத்திருக்கலாம்.

முதல் முறை நடந்த சம்பவம் என்பதைப் பொருத்தவரை இதுவாகவே தோன்றுகின்றது. எவ்வாறிருப்பினும் நான் உங்களுக்கு மிகவும் மோசமான இரு நபர்களைப் பற்றி கூறட்டுமா? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே என்று நாங்கள் கூறினோம். முதலாவது நபர், ஸமூது சமுதாயத்தைச் சேர்ந்த சாலிஹ் நபியின் ஒட்டகத்தின்

கால்களை வெட்டிய உஹைமிர் என்பவன் ஆவான். இரண்டாவது நபர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களே, உங்களின் தலையில் தாக்குதல் நடத்துபவன் ஆவான். எந்த அளவுக்கு என்றால் இந்த தாடி இரத்தத்தால் நனைந்து விடும்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 261 ஹதீஸ் எண் 18511 – 1998 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஸஃப்வான் பத்ருல் ஊலா போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதில் ஆகிர் மாதத்தில் நடைபெற்றது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக விளக்கமாக இவ்வாறு எழுதியுள்ளார்கள். அதாவது தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஷைரா போரிலிருந்து மதீனாவிற்கு திரும்பி வந்து பத்து நாட்கள் கூட கழிந்திருக்கவில்லை. அப்போது மக்காவின் ஒரு தலைவரான குர்ஸ் பின் ஜாபிர் ஃபுஹ்ரி என்பவன் குரைஷிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு மிகவும் புத்திசாலித்தனமாக மதீனாவில் மேய்ப்புத் தளங்களில் திடீரென தாக்குதல் நடத்தினான். அந்த இடம் நகரத்திலிருந்து வெறும் மூன்று மைல் தொலைவில்தான் இருந்தது. அவன் முஸ்லிம்களின் ஒட்டகங்கள் போன்றவற்றை கொள்ளையடித்து சென்று கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த தகவல் கிடைத்தவுடன் அன்னார் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை தமக்குப் பிறகு அமீராக நியமித்து விட்டு முஹாஜிர்களின் குழு ஒன்றை தன்னுடன் அழைத்துக் கொண்டு அவனை பிடிக்க புறப்பட்டார்கள். பத்ருக்கு அருகிலுள்ள ஸஃப்வான் என்ற இடம் வரை சென்றார்கள். அவனைப் பின்தொடர்ந்தார்கள். ஆனால் அவன் தப்பித்து சென்று விட்டான். இந்தப் போரை பத்ருல் ஊலா போர் என்றும் கூறுகின்றார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 330)

இந்த போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு வெள்ளைக் கொடியை வழங்கி இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத் தொகுதி 2 பக்கம் 253 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டிற்கேற்ப ஆங்கில ஆண்டான 623 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்றது. இந்த குறிப்பில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு நற்குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி), ஹஸ்ரத் பஸ்பஸ் பின் அம்ர் (ரலி) ஆகியோரை இணை வைப்பவர்களைப் பற்றி செய்தி அறிந்து வருவதற்காக பத்ரிலுள்ள நீரூற்று வரை அனுப்பி வைத்தார்கள். அங்கு குரைஷிகள் தங்களது விலங்குகளுக்கு நீரூற்றிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். மேலும் இணை வைப்பவர்களின் குழுவைப் பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 349)

பத்ர் போர் சந்தர்ப்பத்தில் இரண்டு படைகளும் ஒருவரையொருவர் எதிர்கொண்டபோது முதன் முதலில் ரபீஆவின் இரண்டு மகன்களான ஷைபா உத்பா மற்றும் வலீத் பின் உத்பா ஆகிய இருவரும் சண்டைக்காக முன் வந்தார்கள். மேலும் சண்டையிட அழைத்தார்கள். அப்போது பனூ ஹாரிஸ் கோத்திரத்தின் மூன்று அன்ஸாரான முஆஸ் மற்றும் முஅவ்வஸ் மற்றும் உஃப்ராவின் மகனான அவ்ஃப் ஆகியோர் அவர்களிடம் சண்டையிட கிளம்பினார்கள். ஆனால் முஸ்லிம்கள் மற்றும் இணை வைப்பவர்களுக்கு மத்தியில் நடைபெறும் முதல் போட்டியில் அன்ஸார் பங்கு பெறுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது சிறிய தந்தையின் பிள்ளைகள் மற்றும் தமது சமுதாயத்தின் மூலம் இந்த மேன்மை வெளிப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரிசையில் திரும்பி வந்து நிற்குமாறு அன்ஸாருக்கு கட்டளையிட்டார்கள். மேலும் அவர்களை பாராட்டினார்கள்.

பின்னர் முஹம்மது (ஸல்) அவர்களே! எங்களுக்கு எதிராக எங்களின் சமுதாயத்தைச் சார்ந்த எங்களுக்கு சமமான நபர்களை அனுப்புவீராக என்று இணை வைப்பவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹாஷிமே! எழுந்திருங்கள். உண்மைக்காக போரிடுங்கள். அல்லாஹ் உங்களது நபியை உண்மையுடன் அனுப்பி இருக்கின்றான். ஆனால் அவர்களோ அல்லாஹ்வின் ஒளியை அணைப்பதற்காக பொய்யுடன் வந்துள்ளார்கள். எனவே ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப், ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப், ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் ஆகியோர் எழுந்து நின்றனர். அவர்கள் எதிரிகளை நோக்கி முன்னேறினார்கள். அப்போது நாங்கள் உங்களை அடையாளம் காண்பதற்கு நீங்கள் ஏதாவது பேசுங்கள் என்று உத்பா கூறினான். அவர்கள் இரும்பு கவசம் அணிந்திருந்தார்கள். அதன் காரணமாக அவர்களின் முகங்கள் மறைந்திருந்தன. அப்போது நான் அப்துல் முத்தலிபின் மகன், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் சிங்கம் ஹம்ஸா ஆவேன் என்று கூறினார்கள். அப்போது உத்பா நல்ல போட்டியாளர் ஆவார் என்று கூறினான்.

இரண்டு பேரும் நல்ல போட்டியாளர்களாக இருந்தனர். அப்போது உத்பா தனது மகன்களிடம் கூறினான்: வலீதே! எழுந்திரு. அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சண்டைக்காக சென்றார்கள். இருவருக்கிடையிலும் வாள் சண்டை நடைபெற்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். பின்னர் உத்பா வந்து நின்றான். அவனுக்கு எதிராக ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் வந்தார்கள். பின்னர் அவர்கள் இருவருக்கிடையிலும் வாள் சண்டை நடைபெற்றது. பின்னர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். பின்னர் ஷய்பா எழுந்து நின்றான். அவனுக்கு எதிரில் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் சென்றார்கள். ஹஸ்ரத் உபைதா அவர்கள் அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களில் மிகவும் வயதானவராக இருந்தார்கள். ஷய்பா ஹஸ்ரத் உபைதா அவர்களின் காலில் வாளை வீசினான். அது அன்னாரின் கால்களின் பின்புறமிருந்த சதையில் பட்டது. அதை கிழித்தது. ஹஸ்ரத் ஹம்ஸா மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஷய்பா மீது தாக்குதல் தொடுத்து அவனை கொலை செய்து விட்டனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 257 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அறிவிப்பு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சில பகுதியை இப்போதும் எடுத்துரைத்து விடுகின்றேன். ஓர் அறிவிப்பில் வருகின்றது. அது இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அதனை எடுத்துரைக்கின்றார்கள். உத்பா பின் ரபீஆ மற்றும் அவனது கடைசி மகனும், சகோதரனும் கூட போருக்காக வந்தனர். மேலும் எமக்கு எதிராக போர் புரிய எவர் வருகின்றார் என்று அவன் உரத்த குரலில் கூறினான். அப்போது அன்ஸாரின் பல இளைஞர்கள் அவனுக்கு பதிலளித்தனர். அப்போது நீங்கள் யார்? என உத்பா கேட்டான். அதற்கு நாங்கள் அன்ஸார் ஆவோம் என்று அவர்கள் கூறினர். அதற்கு எங்களுக்கும் உங்களுக்குமிடையில் எந்தத் தொடர்பும் இல்லை. நாங்கள் எங்களது சிறிய தந்தையின் மகன்களுடன் போர் புரிவதற்கு எண்ணம் கொண்டுள்ளோம் என்று அவன் கூறினான்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹம்ஸாவே! எழுந்திருங்கள். அலியே! எழுந்திருங்கள். உபைதா பின் ஹாரிஸே! முன்னேறுங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹம்ஸா அவர்கள் உத்பாவை நோக்கி முன்னேறினார்கள். நான் ஷய்பாவை நோக்கி முன்னேறினேன் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் உபைதா மற்றும் வலீத் ஆகியோருக்கிடையில் சண்டை நடந்தது. இருவரும் ஒருவர் மற்றவரை கடுமையாக காயப்படுத்தினர். பின்னர் நாங்கள் வலீதின் பக்கம் கவனம் செலுத்தினோம். மேலும் அவனை கொன்று விட்டோம். மேலும் உபைதா அவர்களை போர் மைதானத்திலிருந்து நாங்கள் தூக்கிக் கொண்டு வந்தோம்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுல் ஜிஹாத் ஹதீஸ் எண் 2665)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பத்ர் போர் பற்றி கூறுகின்றார்கள். அதில் நிராகரிப்பாளர்களின் எண்ணிக்கை முஸ்லிம்களை காட்டிலும் மிக அதிகமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு முழுவதும் இறைவனின் சன்னிதானத்தில் பணிவுடன் துஆக்களும், மன்றாடுதலும் செய்வதில் மிக மும்முரமாக இருந்தார்கள். ஆனால் நிராகரிப்பாளர்களின் படைகள் எங்களுக்கு அருகில் வந்தபோது நாங்கள் அவர்களுக்கு முன்னால் அணி வகுத்து நின்றோம். அப்போது சிவப்பு ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந்த ஒருவரின் மீது பார்வை பட்டது. மக்களுக்கு மத்தியில் அவனது சவாரி சென்று கொண்டிருந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அலியே! ஹம்ஸாவே! நிராகரிப்பாளர்களுக்கு அருகில் நிற்கக் கூடியவர்களை அழைத்து சிவப்பு ஒட்டகத்தில் அமர்ந்திருப்பவன் யார் என்று கேட்கும்படி கூறினார்கள். மேலும் அவன் என்ன கூறிக் கொண்டிருக்கின்றான்? என்று வினவும்படியும் கூறினார்கள். அந்த மக்களில் ஒருவரால் நன்மைக்கான அறிவுரை வழங்கமுடியுமென்றால் அது அந்த சிவப்பு நிற ஒட்டகத்தை கொண்ட நபரே ஆவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த நேரத்தில் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களும் முன்னால் வந்து விட்டார்கள். அதற்கு அவர் உத்பா பின் ரபீஃ என்றும் அவர் நிராகரிப்பாளர்களை போரிலிருந்து தடுத்துக் கொண்டிருக்கின்றார் என்றும் கூறினர். அபூ ஜஹில், நீங்கள் கோழைகள் ஆவீர்கள். சண்டைக்கு அஞ்சுகின்றீர்கள் என்று கூறினான். கோழை யார் என்று இன்று பார்க்கலாம் என்று உத்பா ஆவேசமாக கூறுகிறார் என்றும் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 338,339 ஹதீஸ் எண் 948 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும், அவரும் இந்த போரில் பங்கு பெற்றிருந்தார்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தில் என்னைப் பற்றியும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களைப் பற்றியும் இவ்வாறு கூறினார்கள்: உங்கள் இருவரில் ஒருவரின் வலப்பக்கத்தில் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களும், மற்றவரின் இடப் பக்கத்தில் ஹஸ்ரத் மீகாயீல் அவர்களும் உள்ளனர். மேலும் ஹஸ்ரத் இஸ்ராஃபீல் என்பவர் பெரும் வானவர் ஆவார். அவர் போர் நேரத்தில் வருகை தருகின்றார். மேலும் வரிசையில் நிற்கின்றார். (அல்முஸ்தத்ரிக் அலஸ் ஸஹீஹைன் தொகுதி 3 பக்கம் 345 ஹதீஸ் எண் 4711 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் பத்ர் போரைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் போரிட்டுக் கொண்டிருக்கும்போது எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய எண்ணம் தோன்றும். எனவே நான் அன்னாரின் கூடாரத்தின் பக்கம் ஓடோடி சென்று விடுவேன். ஆனால் நான் சென்றபோதெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தாவில் மன்றாடிக் கொண்டிருப்பதையே பார்த்தேன். மேலும் يَاحَيُّ يَاقَيُّوْمُ . يَاحَيُّ يَاقَيُّوْمُ என்ற வார்த்தைகளே அன்னாரின் நாவிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்ததை நான் செவியுற்றேன். அதாவது எனது இறைவா! எனது உயிருள்ள இறைவா! எனது இறைவா! வாழ்வளிக்கும் எஜமானனே! என்று துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நிலையைக்கண்டு நிம்மதி இழந்திருந்தார்கள். சில முறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும் தந்தையும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. தாங்கள் பதற்றமடைய வேண்டாம். அல்லாஹ் தனது வாக்குறுதியை நிச்சயம் முழுமை செய்வான். ஆயினும் தாங்களோ தொடர்ந்து துஆவில் மூழ்கி இருக்கின்றீர்கள் என்று தன்னையும் அறியாமல் கூறி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் வாக்குறுதி சில முறை மறைவான நிபந்தனைகளை கொண்டிருக்கக்கூடும் என்ற அச்சத்தால் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 361)

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணம் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை திருமணம் நடத்தி வைக்கும்படி வேண்டினார்கள். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை திருமணம் முடித்து வைக்கும்படி வேண்டினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மௌனமாக இருந்தார்கள். அவர்களுக்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். மேலும் தாங்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை எனக்கு மணமுடித்து தருவீர்களா? என்று கேட்டேன். அப்போது உங்களிடத்தில் மஹர் தொகையாக எதுவும் உள்ளதா? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு நான், என்னிடம் ஒரு குதிரையும் மேலும் எனது போர்க் கவசமும் உள்ளது என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், குதிரை உமக்கு அவசியமாகும். ஆயினும் உங்களது போர்க்கவசத்தை விற்று விடுங்கள் என்று கூறினார்கள். நான் எனது அந்த கவசத்தை 480 திர்ஹமிற்கு விற்று மஹர் தொகைக்கான ஏற்பாட்டைச் செய்து விட்டேன். ஆனால் ஓர் அறிவிப்பில் வருகிறது. மஹர் தொகையை வைத்துக் கொள்ளுங்கள். என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம். பிறகு கொடுத்துக் கொள்ளலாம் என்று மக்கள் கூறுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முதலில் மஹர் தொகைக்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

இதன் பொருள் அது உடனடியாக செலுத்த வேண்டிய உரிமையாகும். பெண்கள் மஹர் தொகையை முதலிலேயே கேட்கின்றார்கள். நாங்கள் மிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றோம் என்று எனக்கு சிலர் எழுதுகின்றார்கள். பெண்கள் மஹர் தொகையை கேட்கின்றார்கள் என்றால் அது அவர்களது உரிமையாகும். அதை அப்போதே கொடுத்து விட வேண்டும். இல்லையென்றால் அதன் காரணமாக சண்டைகள் ஆரம்பமாகி விடுகின்றது. மணவிலக்கின்போது அது கொடுத்தால் போதும் என்பதல்ல. இதற்கு அதாவது மஹர் தொகைக்கு மணவிலக்குடன் எந்த தொடர்பும் இல்லை.

எவ்வாறிருப்பினும் ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், கவசத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் விற்று விட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதற்குரிய விலையையும் கொடுத்து அக்கவசத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அந்த தொகையை பெற்றுக் கொண்டேன். மேலும் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மடியில் வைத்து விட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து உள்ளங்கை அளவு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் கொடுத்து இந்த பணத்திலிருந்து கொஞ்சம் நறுமணத்தை வாங்கி வாருங்கள் என்றும் மேலும் சில மக்களிடம் நீங்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கான சீர் சாமான்களை ஆயத்தம் செய்யுங்கள் என்றும் வழிகாட்டினார்கள். எனவே ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு ஒரு கட்டிலும், பேரீத்தம் பழ இலைகளால் நிரப்பப்பட்டிருந்த ஒரு தலையணையும் ஆயத்தம் செய்யப்பட்டன.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் இந்த திருமணத்தை நிச்சயித்தவாறு நான் இவ்வாறு செய்ய வேண்டும் என எனது இறைவன் எனக்கு கட்டளையிட்டுள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். திருமணம் முடிந்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் உங்களிடம் வருகை தந்த பிறகு நான் வரும் வரை எதுவும் பேச வேண்டாம்.

எனவே ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்களுடன் சென்றார்கள். மேலும் வீட்டின் ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டார்கள். நானும் ஒரு பக்கம் அமர்ந்து கொண்டேன். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் எனது சகோதரர் இங்கு இருக்கின்றாரா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். தங்களின் சகோதரரா? தாங்கள் தங்களின் மகளை அவருடனா திருமணம் முடித்து வைத்துள்ளீர்கள்? என்று ஹஸ்ரத் உம்மே அய்மன் அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆம் என்று கூறினார்கள். (இதுபோன்ற உறவில் திருமணம் நடக்க முடியும். ஏனெனில் அன்னார் உடன் பிறந்த சகோதரர் கிடையாது) மேலும் எனக்கு தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

அன்னார் எழுந்து சென்றார்கள். மேலும் வீட்டில் வைக்கப்பட்டிருந்த ஒரு குவளையில் அன்னார் தண்ணீர் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை பெற்றுக் கொண்டார்கள். அதனைக் கொண்டு வாய் கொப்பளித்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், முன்னால் வாருங்கள் என்று கூறினார்கள். அன்னார் முன்னால் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னார் மீதும் அன்னாரின் தலையிலும் சற்று தண்ணீரை தெளித்தார்கள். பின்னர் இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ اِنِّيْ اُعِيْذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

பொருள்: அல்லாஹ்வே! நான் இவரையும், இவரின் சந்ததிகளையும் விரட்டப்பட்ட ஷய்த்தானிடமிருந்து உனது பாதுகாப்பில் ஒப்படைக்கின்றேன்.

பின்னர் திரும்பி நிற்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அன்னார் திரும்பி நின்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் தோள்களில் தண்ணீரை தெளித்தார்கள். இதேபோன்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடனும் நடந்து கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், நீங்கள் உங்களது மனைவியிடம் அல்லாஹ்வின் பெயருடனும், பரக்கத்துடனும் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடமிருந்து மற்றோர் அறிவிப்பும் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பாத்திரத்தில் வுளூ செய்தார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) மீது அந்த தண்ணீரை தெளித்தார்கள். மேலும் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ بَارِكْ فِيْهِمَا وَبَارِكْ لَهُمَا فِيْ شَمْلِهِمَا

பொருள்: அல்லாஹ்வே! இவர்கள் இருவருக்கும் பரக்கத் செய்வாயாக! இவர்கள் இருவரும் இணைவதிலும் பரக்கத் ஏற்படுத்துவாயாக!

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) மற்றும் ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) ஆகியோர் கூறுகின்றனர்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை ஆயத்தம் செய்யும்படி கூறினார்கள். எந்த அளவுக்கு என்றால் நாங்கள் அவர்களை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் அழைத்துச் சென்றோம். எனவே வீட்டிற்கு வந்தோம். மேலும் அவர்களுக்காக பத்ஹா என்ற தலையணையை ஆயத்தம் செய்தோம். நாங்கள் எங்களது கைகளாலேயே அதனை தைத்தோம். பேரீத்தம் பழம் மற்றும் உலர் திராட்சை ஆகியவற்றை உண்பதற்காகவும், இனிப்பான பானம் ஒன்றை குடிப்பதற்காகவும் ஆயத்தம் செய்தோம். பின்னர் தடி ஒன்றை எடுத்து அறையின் ஒரு ஓரத்தில் வைத்தோம். அதில் ஆடைகளை தொங்கவிடுவதற்காகவும்,, தண்ணீர் பையை தொங்கவிடுவதற்காகவும் அவ்வாறு செய்தோம். நாங்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தை விட சிறந்த திருமணத்தை கண்டதில்லை. வலீமா விருந்தில் பேரீத்தம் பழங்களும், பாலாடை கட்டிகளும், ஹைஸீர் போன்றவையும் அடங்கி இருந்தன. ஹைஸீர் என்பது பேரீத்தம் பழம், நெய் மற்றும் பாலாடைக் கட்டி ஆகியவற்றால் செய்யப்படும் ஒரு வகை உணவாகும்.

ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அந்த காலத்தில் இதை விட சிறந்த வலீமா விருந்து வேறு எந்த விருந்தும் இருந்ததில்லை.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நாமே மரணமடைந்தவர்களுக்கு உயிர் கொடுக்கிறோம். மேலும் அவர்கள் முன்னே அனுப்புவற்றையும் அவர்கள் பின்னால் விட்டுச் செல்பவற்றையும் பதிவு செய்கிறோம்; தெளிவான ஒரு பதிவேட்டில் ஒவ்வொன்றையும் பதிவு செய்துள்ளோம். (36:13)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 8 பக்கம் 19 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் திருமணத்தைப் பற்றி விளக்கமாக குறிப்பிட்டவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளில் மிகவும் சிறிய பிள்ளையாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது பிள்ளைகளில் எல்லாரையும் விட ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மீது மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள். தனது தனிப்பட்ட சிறப்புகளின் காரணமாகவே இந்த தனித்தன்மை வாய்ந்த அன்பிற்கு எல்லாரையும் விட அதிக தகுதி படைத்தவராக அன்னார் இருந்தார்கள். அப்போது அன்னாரின் வயது சற்று ஏறக்குறைய 15 வயதாக இருந்தது. அந்நிலையில் திருமணத்திற்றகான வரன்கள் வரத்தொடங்கி இருந்தன.

முதன் முதலில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விண்ணப்பம் செய்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விண்ணப்பித்தார்கள். அவர்களின் விண்ணப்பமும் ஒப்புக் கொள்ளப்படவில்லை. அதன் பிறகு அவ்விரு சான்றோர்களும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருப்பம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மீது இருப்பதை அறிந்து கொண்டார்கள். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், நீங்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை மணமுடிக்க விண்ணப்பம் செய்யுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் நானும் முதலில் ஆசைப்பட்டிருந்தேன். ஆனால் வெட்கத்தின் காரணமாக பிறகு மௌனமாகி விட்டேன் என்று கூறினார்கள். இருப்பினும் உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் அன்னார் சென்றார்கள். பின்னர் விண்ணப்பித்து விட்டார்கள்.

மற்றொரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வஹீயின் மூலமாக இறைவனிடமிருந்து இந்த சைகை கிடைத்திருந்தது. அதாவது ஹஸ்ரத் ஃபாத்திமாவின் திருமணம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் நடைபெற வேண்டும். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் விண்ணப்பித்தார்கள். அப்போது எனக்கு இது தொடர்பாக முன்னரே இறைவனிடமிருந்து இறை வழிகாட்டல் கிடைத்திருந்தது என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அன்னார் வெட்கத்தின் காரணமாக மௌனமாக இருந்தார்கள். இதுவும் ஒரு வகையில் சம்மதத்திற்கான ஒரு வெளிப்பாடாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிரீன் மற்றும் அன்ஸாரின் ஒரு கூட்டத்தை ஒன்றுகூட்டி ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தை நடத்தினார்கள். இந்த சம்பவம் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டின் ஆரம்பம் அல்லது இடைப்பட்ட காலத்தில் நடந்ததாகும்.

இதன் பிறகு பத்ர் போர் ஆரம்பமாகி இருந்தது. ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு துல் ஹஜ் மாதம் 2 ஆம் தேதி மணப்பெண்ணை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடும் நடந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களிடம் மஹர் தொகையாக கொடுப்பதற்கு எதுவும் உள்ளதா? இல்லையா? என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். இதற்கு முன்பு நான் கூறிய தோட்டத்தின் சம்பவம் திருமணத்திற்கு முன் நிகழ்ந்த சம்பவமாகும். நான் சரியாக கூறியிருந்தேன். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை அழைத்து, உங்களிடம் மஹர் தொகையாக கொடுப்பதற்கு எதுவும் உள்ளதா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் எதுவும் இல்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர் வெற்றியின் மூலம் கிடைத்த செல்வங்களிலிருந்து நான் உங்களுக்கு வழங்கிய கவசம் என்னவாயிற்று? என்று கேட்டார்கள். அது என்னிடம்தான் உள்ளது என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் அதை எடுத்து வாருங்கள் என்று கூறினார்கள். எனவே அந்த கவசம் 480 திர்ஹம் தொகைக்கு விற்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தொகையிலிருந்து திருமணத்திற்கான செலவிற்கு ஏற்பாடு செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சீராக கொடுத்த பொருட்கள் இவையே ஆகும். ஒரு தடித்த போர்வை, ஒரு தோலாலான தலையணை. அதற்குள் பேரீத்தம் பழ மரத்தின் காய்ந்த இலைகள் நிரப்பப்பட்டிருந்தன. மேலும் தண்ணீர் பை ஒன்றும் கொடுக்கப்பட்டது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு கொடுத்த சீர் வரிசையில், ஓர் ஆட்டுரலும் இடம் பெற்றிருந்தது. இந்த அனைத்து பொருட்களும் ஆயத்தம் செய்யப்பட்டதும் வீட்டைப் பற்றிய கவலை ஏற்பட்டது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அப்போது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பள்ளிவாசலின் ஒரு பகுதியிலேயே தங்கி வந்தார்கள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு கணவன் மனைவி வசிப்பதற்கு தனியாக ஒரு அறை என்பது அவசியமானதாக இருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு ஒரு வீட்டை ஆயத்தம் செய்தார்கள். அதில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் திருமணத்திற்குப் பிறகு அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதே நாளன்று அந்த வீட்டிற்கு வருகை தந்தார்கள். சிறிது தண்ணீரை கொண்டு வருமாறு கூறி அதில் துஆவும் செய்தார்கள். அந்த தண்ணீரை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகிய இருவர் மீதும் தெளித்து இந்த சொற்களில் துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ بَارِكْ فِيْهِمَا وَبَارِكْ عَلَيْهِمَا وَبَارِكْ لَهُمَا نَسْلَهُمَا

அதாவது அல்லாஹ்வே! ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கிடையிலான தொடர்புகளில் பரக்கத்தை வழங்குவாயாக. அவர்களின் இந்த தொடர்புகளில் பரக்கத்தை வழங்குவாயாக. அவர்களின் சந்ததிகளிலும் பரக்கத்தை வழங்குவாயாக.

பின்னர் புதுமண தம்பதிகளை தனியாக விட்டு விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். அதன் பிறகு ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள், ஹாரிஸ் பின் நுஃமான் அன்ஸார் சஹாபியிடம் சில வீடுகள் உள்ளன. அவற்றில் ஒரு வீட்டை காலி செய்து தரும்படி தாங்கள் அன்னாரிடம் கூற வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வேண்டினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர் நமக்காக ஏற்கனவே பல வீடுகளை காலி செய்து தந்துள்ளார். இப்போது அவரிடம் இதனை கூறுவதற்கு எனக்கு தயக்கம் உள்ளது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹாரிஸா அவர்களுக்கு எப்போது, எப்படி இந்த தகவல் கிடைத்தது என்பது தெரியவில்லை. அவர்கள் ஓடோடி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் இருப்பதெல்லாம் தங்களுக்கே உரியதாகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் என்னிடமிருந்து ஒப்புக் கொள்கின்ற விஷயத்தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்றும் கூறினார்கள். மேலும் என்னிடம் இருக்கின்ற விஷயத்தை விட நான் உங்களுக்கு கொடுக்கின்ற விஷயம்தான் சிறந்ததாகும் என்று கூறினார்கள். இந்த கலப்பற்ற சஹாபி அடம்பிடித்து தனது ஒரு வீட்டை காலி செய்து ஒப்படைத்து விட்டார். ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோர் அந்த வீட்டிற்கு சென்று விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 455,456)

ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகிய இருவரும் தங்களது ஏழ்மையிலும், வறுமையிலும் போதுமென்ற மனதை வெளிப்படுத்தி வந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் உரலில் அரைப்பதால் தமது கைகளில் வேதனை ஏற்படுவதாக முறையிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில கைதிகள் வந்திருந்தார்கள். எனவே ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். ஆனால் அப்போது அன்னாரை சந்திக்க முடியவில்லை.ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை சந்தித்தார்கள். மேலும் அன்னாரிடம் தான் வந்த விவரத்தை கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தவுடன் ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் வந்ததைப் பற்றி கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் படுக்கைக்கு சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் வருகை தந்தார்கள். நாங்கள் எழுந்தோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் உங்களது இடத்திலேயே இருந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பின்னர் எங்களுக்கு மத்தியில் அமர்ந்து கொண்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் பாதங்களின் குளிர்ச்சியை நான் எனது நெஞ்சத்தில் உணர்ந்தேன். நீங்கள் கேட்ட விஷயத்தை விட உங்கள் இருவருக்கும் சிறந்த விஷயம் ஒன்றை நான் கூறட்டுமா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். பின்னர், நீங்கள் இருவரும் படுக்கையில் படுக்கும்போது 34 முறை அல்லாஹு அக்பர் என்றும், 33 முறை சுப்ஹானல்லாஹ் என்றும், 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும் கூறுங்கள். இது உங்கள் இருவருக்கும் வேலை ஆட்களை விட மிகச் சிறந்த ஒன்றாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் அவர்களிடம் இரண்டு தூதர்களை அனுப்பினோம்;
அவ்விருவரையும் அவர்கள் பொய்யாக்கினர். எனவே மூன்றாவது
ஒருவரைக் கொண்டு அவ்விரு தூதர்களையும் நாம்
வலிமைப்படுத்தினோம். எனவே நிச்சயமாக நாங்கள் உங்களிடம்
தூதர்களாக அனுப்பப்பட்டுள்ளோம் என்று அவர்கள் கூறினர் (36:15)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வேலைக்கு ஆட்களை தரும்படி விண்ணப்பம் செய்ய வருகை தந்தார்கள். மேலும் தனது பணியின் கஷ்டங்களை முறையிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எம்மிடம் உங்களுக்கு வேலைக்காரர் இல்லை என்று கூறினார்கள். அதாவது இவ்வாறு உங்களுக்கு என்னிடமிருந்து வேலை ஆட்கள் கிடைக்காது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு கொடுக்க விரும்பவில்லை. அன்னாருக்கு அதிகாரம் இருந்தபோதிலும் அன்னார் கொடுக்கவில்லை. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் போர் செல்வங்களில் உரிமை இருந்தது. ஆனால் அன்னார் கொடுக்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களுக்கு வேலை ஆட்களை விட மிகச் சிறந்த ஒன்றை நான் கூறட்டுமா? என்று கேட்டார்கள். நீங்கள் உங்கள் படுக்கைக்கு செல்லும்போது 33 முறை சுப்ஹானல்லாஹ் என்றும், 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும், 34 முறை அல்லாஹு அக்பர் என்றும் கூறுங்கள் என்று கூறினார்கள். இது சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும்.

(ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுத் திக்ர்.... ஹதீஸ் எண் 6915,6918)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்தவாறு இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் புகாரியின் ஆதாரத்தின் அடிப்படையில் குறிப்பிடுகின்றார்கள். ஹதீஸில் இவ்வாறு வருகிறது. அதாவது ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் உரலில் அரைப்பதால் தமக்கு துன்பம் ஏற்படுகின்றது என்று புகார் செய்தார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சில அடிமைகள் வந்தனர். எனவே ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். ஆனால் அப்போது அன்னாரால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்க முடியவில்லை. எனவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் தனது வருகையின் நோக்கத்தைப் பற்றி தகவல் கொடுத்து விட்டு வீட்டிற்கு திரும்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்ததும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் வீட்டிற்கு வந்து சென்ற தகவலை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் வருகை தந்தார்கள். நாங்கள் அப்போது படுக்கையில் படுத்து விட்டோம். நான் அன்னாரை கண்டதும் எழுந்து நிற்க முயற்சி செய்தேன். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களது இடத்திலேயே இருங்கள் என்று கூறினார்கள். பின்னர் எங்கள் இருவருக்குமிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமர்ந்து கொண்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாரின் பாதங்களிலுள்ள குளிர்ச்சியை நான் எனது நெஞ்சத்தில் உணர்ந்தேன். அன்னார் அமர்ந்த பிறகு, நீங்கள் கேட்ட விஷயத்தை விட சிறந்த ஒன்றை நான் உங்களுக்கு கூறட்டுமா? நீங்கள் படுக்கைக்கு செல்லும்போது 34 முறை தக்பீர் கூறுங்கள். 33 முறை சுப்ஹானல்லாஹ் என்றும் 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்றும் கூறுங்கள். இது உங்களுக்கு வேலை ஆட்களை விட சிறந்ததாக இருக்கும் என்று கூறினார்கள்.. (சஹீஹ் முஸ்லிம், ஹதீஸ் எண் 6918,6915)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல்வத்தை பங்கிடுவதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள் என்பது இந்த சம்பவத்திலிருந்து தெரிய வருகின்றது. ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்கு ஒரு வேலைக்காரரின் தேவை இருந்தது. உரலை அரைப்பதால் அன்னாரின் கரங்களில் வேதனை ஏற்பட்டு வந்தது. அவ்வாறிருந்தபோதிலும் பிரித்துக் கொடுப்பதற்காக தன்னிடம் வந்த செல்வங்களை சஹாபிகளுக்கு மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் அதில் உரிமை இருந்திருக்கக்கூடும். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கும் அதில் உரிமை இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக செயலாற்றினார்கள். அந்த செல்வங்களிலிருந்து தனது அன்பர்களுக்கும், தனது உறவினர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடுக்க விரும்பவில்லை. ஏனென்றால் எதிர்காலத்தில் இதிலிருந்து மக்கள் ஏதாவதொரு விளைவுகளை தேடிக் கொள்ளவது சாத்தியமானதாக இருந்தது. அரசன் மக்களின் செல்வத்தை தமக்கு ஆகுமானதாக கருதிக் கொள்வதுண்டு. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மிடம் பங்கிட்டு கொடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட அடிமைகளில் எவரையும் அவர்களுக்கு கொடுக்கவில்லை.

இந்த இடத்தில் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த செல்வங்களில் இறைவன் அன்னாருக்கும், அன்னாரின் உறவினருக்கும் பங்கை நிர்ணயித்திருந்தான். அதிலிருந்து அன்னார் செலவழித்து வந்தார்கள். மேலும் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் கொடுத்து வந்தார்கள். ஆயினும் ஒரு பொருள் தமது பங்கில் வந்து விடாத வரை அன்னார் ஒருபோதும் அதிலிருந்து செலவு செய்தது கிடையாது. தமது உறவினர்கள் மற்றும் அன்பவர்களுக்கும் கொடுக்க மாட்டார்கள். இதுபோன்ற சமுதாய கருவூலத்தின் பாதுகாவலராக திகழும் அரசனின் உதாரணத்தை உலகத்தால் காட்ட முடியுமா? இதற்கு நிகரான ஓர் உதாணரம் கிடைக்க முடியுமென்றால் அதுவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த தூய தொண்டர்களிடமிருந்தே கிடைக்க முடியும். மற்ற மார்க்கத்திலிருந்து இதற்கு நிகரான உதாரணம் கிடைக்க முடியாது.

(சீரத்துன் நபி (ஸல்), அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 544,555)

ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இரவில் என்னிடமும், அன்னாரின் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமான (ரலி) அவர்களிடமும் வருகை தந்தார்கள். நீங்கள் இருவரும் தொழுது வருகின்றீர்களா? என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது உயிர்கள் அல்லாஹ்வின் கரத்தில் உள்ளன. அவன் விரும்பும்போது எங்களை எழுப்புகின்றான். நாங்களும் எழுந்து விடுகின்றோம் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு எந்த பதிலும் தரவில்லை. அன்னார் திரும்பிச் சென்று விட்டார்கள். அதாவது தஹஜ்ஜுத் தொழவில்லையா? என்பதே அதன் பொருளாகும். அன்னார் தஹஜ்ஜுத் தொழுகையைப் பற்றியே கேட்டார்கள். தஹஜ்ஜுத் நேரத்தில் எங்களது கண்கள் விழித்து விட்டால் அது அல்லாஹ்வின் விருப்பமாகும். அல்லாஹ் எங்களை எழுப்ப விரும்பினால் எழுப்பி விடுகின்றான். அவன் எழுப்புகின்றான். நாங்களும் தொழுது விடுகின்றோம் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த விவாதமும் செய்யவில்லை. மௌனமாக திரும்பிச் சென்று விட்டார்கள். அன்னார் திரும்பி சென்று கொண்டிருக்கும்போது தனது தொடையில் கையால் தட்டியவாறு وَكَانَ الْإِنْسَانُ أَكْثَرَ شَيْءٍ جَدَلًا என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள்.

பொருள்: மனிதன் மிகுதியாக வாதம் செய்பவனாக இருக்கின்றான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஹஜ்ஜுத்... ஹதீஸ் எண் 1127)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்: ஒரு முறை இரவில் தனது மருமகன் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் தமது மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் வீட்டிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்றார்கள். மேலும் தஹஜ்ஜுத் தொழுகின்றீர்களா? என்று வினவினார்கள். (அதாவது நடு இரவில் எழுந்து தொழப்படும் தொழுகையைப் பற்றி வினவினார்கள்.) அதற்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தொழுவதற்கு முயற்சி செய்கின்றோம். ஆனால் இறைவனின் விருப்பத்தின் கீழ் சில நேரத்தில் நாங்கள் கண் விழிக்காதபோது தஹஜ்ஜுத் தொழுகையை விட்டு விடுகின்றோம். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தஹஜ்ஜுத் தொழுது வாருங்கள் என்று கூறி தனது வீட்டிற்கு புறப்பட்டு விட்டார்கள். வழிப்பாதையில் மீண்டும் மீண்டும், وَكَانَ الْإِنْسَانُ أَكْثَرَ شَيْءٍ جَدَلًا என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

இது திருக்குர்ஆனின் வசனமாகும். அதன் பொருள் என்னவென்றால், மனிதன் பெரும்பாலும் தனது தவறை ஒப்புக் கொள்வதற்கு பதற்றமடைகின்றான். மேலும் பல்வேறு வகையான ஆதாரங்களைக் கொடுத்து தனது குறைகள் மீது திரையிடுகின்றான். அதாவது சில முறை எங்களிடம் தவறு ஏற்பட்டு விடுகின்றது என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும் கூறுவதற்கு பகரமாக நாங்கள் கண் விழிக்காமல் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாக இருக்கிறது என்று தங்களது தவறை அல்லாஹ்வின் பக்கம் ஏன் சுட்டிக்காட்ட வேண்டும்? என்பது அதன் கருத்தாகும்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 389,390)

இதே சம்பவத்தை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எப்படிப்பட்ட பதிலை வழங்கினார்கள் என்றால் அது தர்க்கம் மற்றும் எதிர்ப்பின் வகையாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபப்படுவதற்கு பகரமாக அன்னார் மிக நுட்பமான வழிமுறையை மேற்கொண்டார்கள். அந்த நுட்பமான வழிமுறையின் இன்பத்தை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தனது வாழ்வின் இறுதிநாள் வரை உணர்ந்திருப்பார்கள். அன்னார் அடைந்த இன்பத்திற்கு அன்னார் முழு உரிமை பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது அதிருப்தியை வெளிப்படுத்திய வழிமுறையை அறிந்து நுட்பமான பார்வை கொண்ட ஒவ்வொருவருக்கும் இன்றும் கூட ஆச்சரியம் ஏற்படுகின்றது.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஏறக்குறைய தனது வாழ்க்கையின் இறுதி நாட்கள் வரை இதன் இனிமையை உணர்ந்திருப்பார்கள். இப்போதும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய அதிருப்தியின் அந்த முன்மாதிரி

**திருக்குர்ஆனிலிருந்து...**

(நிராகரிக்கும்) அடியார்களின் பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்குள்ளாக்கவே செய்கின்றனர். (36:31)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

மிகவும் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டிய விஷயமாகும்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது புகாரியின் அறிவிப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இரவில் எனக்கும் ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹ்ரா (ரலி) அவர்களுக்கும் இடையில் வந்து அமர்ந்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளாக இருந்தார்கள். மேலும் அன்னார் நீங்கள் தஹஜ்ஜுத் தொழுது வருகின்றீர்களா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது உயிர்கள் அல்லாஹ்வின் பிடியில் உள்ளன. அவன் எங்களை எழுப்பும்போது நாங்கள் எழுந்து விடுகின்றோம் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டு திரும்பிச் சென்று விட்டார்கள். மேலும் என்னிடம் எதுவும் கூறவில்லை. பிறகு நான் அன்னார் ,இவ்வாறு கூறக் கேட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் முகத்தை திருப்பிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அன்னார் தனது தொடையில் கையால் அடித்து மனிதன் மிகவும் தர்க்கம் செய்கின்றான் என்று கூறிக் கொண்டிருநதார்கள்.

அல்லாஹ்! அல்லாஹ்! எவ்வளவு நுட்பமான வழிமுறையின் மூலம் இவ்வாறு பதிலளிக்கக் கூடாது என்ற விஷயத்தை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புரிய வைத்துள்ளார்கள்! அந்த இடத்தில் வேறொருவர் இருந்திருந்தால் எனது அந்தஸ்தை பாருங்கள்; எனது கண்ணியத்தைப் பாருங்கள். மேலும் உங்களது பதிலையும் பாருங்கள். உங்களுக்கு எனது இந்த கூற்றை ரத்து செய்வதற்கு என்ன உரிமை இருக்கிறது? என்று தர்க்கம் செய்திருப்பார். அல்லது குறைந்தபட்சம் இவ்வாறு கூறியிருப்பார். அதாவது மனிதன் நிர்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கின்றான், அவனது அனைத்து செயல்களும் அல்லாஹ்வின் பிடியிலேயே உள்ளன, அவன் எவ்வாறு விரும்புகின்றானோ அவ்வாறே செயல்பட வைக்கின்றான், இறைவன் விரும்பினால் தொழுகைக்கான பாக்கியத்தை வழங்குகிறான் என்ற வாதம் தவறாகும். பலவந்தம் என்ற விவகாரம் திருக்குர்ஆனுக்கு எதிரானதாகும் என்று கூறி தர்க்கம் செய்திருப்பார். ஆனால் இந்த இரண்டு வழிமுறைகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதையும் மேற்கொள்ளவில்லை.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீது அன்னார் அதிருப்தி அடையவுமில்லை. தர்க்கம் செய்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கூற்றிலுள்ள தவறையும் உணர்த்தவில்லை. மாறாக, ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொண்டு அவர்களின் பதிலைக் கேட்டு தனது ஆச்சரியத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள். அதாவது மனிதன் மிகவும் விநோதமானவன் ஆவான். எல்லா விஷயங்களிலும் ஏதாவது ஒன்றை தனக்கு சாதகமாக ஆக்கிக் கொள்கின்றான். பின்னர் தர்க்கம் செய்யத் தொடங்கி விடுகின்றான். உண்மையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வளவு கூறியதே தன்னுள் ஏராளமான நன்மைகளை கொண்டிருந்தது. அதில் பத்தில் ஒரு பங்கு கூட வேறு எவராலும், எவருடனும் தர்க்கம் செய்து விஷயங்களை புரிய வைக்க முடியாது. இந்த ஹதீஸிலிருந்து நமக்கு மூன்று விஷயங்கள் தெரிய வருகின்றன. மேலும் இதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் பல்வேறு அம்சங்களும் வெளிப்படுகின்றன.

இதே இடத்தில் அதனை குறிப்பிடுவது உகந்ததாக தோன்றுகிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நேர்மையின் மீது எந்த அளவுக்கு அக்கறை இருந்தது என்பது தெரிய வருகின்றது. அதாவது இரவு நேரத்தில் சென்று தனது உறவினர்களை கருத்தில் கொண்டார்கள். ஏராளமான நபர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சுயம் நல்லவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மக்களுக்கும் நல்ல போதனைகளை வழங்குகின்றார்கள். ஆனால் அவர்களின் குடும்பத்தின் நிலை மோசமாக இருக்கின்றது. அவர்கள் தனது குடும்பத்தினரின் சீர்திருத்தமும் நடைபெற வேண்டும் என்று எண்ணம் கொள்வதில்லை. அப்படிப்பட்ட மக்களைப் பற்றி ஒரு பழமொழி பிரபலமாகும். அதாவது விளக்கிற்கு கீழே இருள் இருக்கும். அதாவது விளக்கு தன்னை நோக்கி வரும் பொருட்களுக்கு ஒளியூட்டி விடுகின்றது. ஆனால் சுயம் அதற்கு கீழே இருள் இருக்கின்றது. இதேபோன்று இந்த மக்கள் பிறருக்கு அறிவுரை செய்வதற்கு சுற்றித் திரிகின்றனர். ஆனால் தனது குடும்பத்தைப் பற்றி கவலை கொள்வதில்லை. தமது ஒளியிலிருந்து தமது வீடு மற்றும் குடும்பத்தினர் எவ்வாறு பயன் பெறுகின்றனர் என்பதை சீர்தூக்கி பார்ப்பதில்லை. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை கருத்தில் கொண்டிருந்தார்கள். அவர்களின் அன்பர்களும் இந்த ஒளியிலிருந்து ஒளி பெற வேண்டும் என்று விரும்பினார்கள். எந்த ஒளியைக் கொண்டு உலகை ஒளியூட்ட விரும்பினார்களோ அதிலிருந்து அவர்களும் பயன் பெற வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்காக அவர்கள் இறைவணக்கமும் செய்து வந்தார்கள். மேலும் அவர்களை சோதிப்பதிலும், ஆய்வு செய்வதிலும் ஈடுபட்டு வந்தார்கள். உறவினர்களுக்கு தர்பிய்யத் வழங்குவது என்பது ஓர் உயர் அந்தஸ்தைக் கொண்ட ஆயுதமாகும். அது அன்னாரிடத்தில் இல்லாமல் இருந்திருந்தால் அன்னாரின் ஒழுக்கத்தில் ஒரு பெரும் விலையின் குறை ஏற்பட்டிருக்கும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகிற்கு முன்னால் என்ன போதனையை எடுத்து வைத்திருந்தார்களோ அதன் மீது அன்னாருக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. ஒரு நிமிடத்திற்கு கூட அதில் அன்னார் சந்தேகம் கொள்ளவில்லை. உலகத்தை முட்டாளாக்குவதற்காகவும், தனது அரசாட்சியை நிலைபெறச் செய்வதற்காகவுமே இந்த அனைத்து ஏற்பாடுகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்து வந்தார்கள் நவூதுபில்லாஹ். அவர்களுக்கு எந்த வஹீயும் வந்ததில்லை என்று சிலர் ஆட்சேபனை செய்கின்றனர். அது தவறாகும். மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூதராகவும், அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டவராகவும் இருந்தார்கள். அன்னாரின் உள்ளத்திற்கு வலிமை வழங்கப்பட்டிருந்தது. அதற்கு நிகரான உதாரணம் உலகில் எங்கும் காணக் கிடைக்காது. மக்களுக்கு மத்தியில் அவர்கள் செயற்கையாக பணி செய்து தனது உண்மையை நிரூபித்து விட்டார்கள் என்று சிலர் கூறலாம். ஆனால் இந்த எண்ணம் தவறாகும்.

ஏனெனில் இரவு நேரத்தில் ஒரு மனிதர் குறிப்பாக தனது மகள் மற்றும் மருமகனிடத்தில் செல்கின்றார். மேலும் இறைவன் கடமையாக்காத இறைவணக்கம் செய்து வருகின்றார்களா? என்று விசாரிக்கின்றார். இன்னும் சொல்வதென்றால், அந்நேரத்தில் தொழுவதை நம்பிக்கையாளர்களை இறைவன் அவர்களின் நிலைமைகளில் விட்டு விட்டான். (அந்த தொழுகையானது இரவு நேரத்தில் எழுந்து தொழப்படுகின்றது.) இரவு நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல்வதும், தஹஜ்ஜுத் தொழும்படி தனது மகளுக்கும், மருமகனுக்கும் அறிவுரை செய்வதும் தனது போதனையின்மீது அன்னாருக்கு இருந்த முழுமையான நம்பிக்கையை காட்டுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த போதனையின் படியே மக்களை வழிநடத்த விரும்பினார்கள்.

ஒரு பொய்யான மனிதன் தனது பிள்ளைகளுக்கு இதுபோன்ற மறைவான நேரத்தில் அந்த போதனையின்படி செயல்பட அறிவுரை வழங்கியிருக்க முடியாது. இது எப்போது சாத்தியம் என்றால் அந்த போதனையின்படி நடக்காமல் சிறப்புகளை பெற முடியாது என்று ஒரு மனிதனுக்கு உள்ளத்தில் இந்த உறுதி இருக்க வேண்டும். போதனையின்படி நடப்பது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். மறைமுகமான நேரத்தில் அறிவுரை கூட அந்த மனிதனால் செய்ய முடியாது.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், அதனை நிரூபிப்பதற்காகவே நான் இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் புரிய வைப்பதற்கு பொறுமையை கையாண்டு வந்தார்கள். சண்டையிடுவதற்கு பகரமாக அன்பு மற்றும் நேசத்தால் ஒருவருக்கு அவரின் தவறுகளை சுட்டிக் காட்டினார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கேள்வியை இவ்வாறு ரத்து செய்ய விரும்பியிருந்தார்கள். அதாவது நாங்கள் தூங்கிவிடும்போது கண்விழிப்பது எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்று கூறினார்கள். ஏனென்றால் உறங்கும் மனிதனுக்கு எதுவும் தெரிவதில்லை. இன்ன நேரம் வந்திருக்கிறது. நான் இன்ன இன்ன பணிகளை செய்ய வேண்டும் என்பதை அவன் அறிவதில்லை.

எனவே அல்லாஹ் கண் விழிக்கச் செய்து விட்டால் தொழுது விடுகின்றோம். இல்லையென்றால் எங்களுக்கு நிர்பந்தம் உள்ளது என்பது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பதிலாக இருந்தது. ஏனென்றால் அந்த நேரம் ஓய்வுக்கான நேரமாக இருந்தது. இந்த விஷயத்தை கேட்டு விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டிருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் இருந்த ஈமான் ஒருபோதும் அன்னாரை தஹஜ்ஜுத் நேரம் கழிந்து விடுவதையும், அதிலிருந்து அன்னார் கவனமற்றவர்களாக இருப்பதையும் அனுமதித்ததில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது முகத்தை வேறொரு பக்கம் திருப்பிக் கொண்டு, மனிதன் விஷயங்களை கேட்பதற்கு பகரமாக சண்டையிடுகின்றான் என்று மட்டும் கூறினார்கள். அதாவது நீங்கள் எதிர்காலத்தில் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். நேரத்தை வீணடிக்கக்கூடாது. மேலும் இவ்வாறு சாக்குப் போக்குகளையும் கூறக்கூடாது என்று புரிய வைத்தார்கள். ஆக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்திற்குப் பிறகு நான் ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதே இல்லை.

(சீரத்துன் நபி (ஸல்), அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 588,590)

தற்போது இந்த நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. இனியும் தொடரும். இன்ஷா அல்லாஹ். இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் நிலவரம் மேலும் கடினமாகிக் கொண்டே செல்கின்றது. சில அரசாங்க அதிகாரிகள் மௌலவிகளுக்குப் பின்னால் நடந்து அவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு நமக்கு எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியுமோ ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றனர். எனவே குறிப்பாக துஆ செய்யுங்கள். மேலும் ரப்வாவிலுள்ள அஹ்மதிகளும், பாகிஸ்தானில் வசிக்கின்றவர்களும், மற்ற நகரங்களில் வாழ்கின்ற அஹ்மதிகளும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா இடங்களிலும் அவர்களை பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் எதிரிகளின் தீங்குகளிலிருந்து அவர்களை பாதுகாப்பானாக. எதிரிகளின் திட்டங்கள் மிகவும் கொடூரமான மற்றும் அபாயகரமான திட்டங்களாகும். அதிலிருந்து அல்லாஹ் அவர்களை காப்பாற்றுவானாக. மேலும் அந்த மக்களை இப்போது பிடிப்பதற்கான ஏற்பாட்டை இறைவன் விரைவாக செய்வானாக.

ஜுமுஆவிற்குப் பிறகு நான் சில ஜனாஸா காயிப் தொழுகைகளை

நடத்துவேன். அவர்களைப் பற்றிய சுருக்கமான நற்குறிப்பையும் செய்து விடுகின்றேன். முதலாவது நற்குறிப்பு கனடாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கமாண்டர் சவுத்ரி முஹம்மது அஸ்லம் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் நவம்பர் மாதம் 2 ஆம் தேதி 2020 ஆம் ஆண்டு வஃபாத்தாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

கமாண்டர் சாஹிப் 1929 ஆம் ஆண்டு குஜ்ரான்வாலாவில் பிறந்தார்கள். குஜ்ரான்வாலாவில் அன்னார் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். முதலிடத்தை பெற்றிருந்தார்கள். பின்னர் தஃலீமுல் இஸ்லாம் காலேஜ் மற்றும் கவர்ண்மன்ட் எஃப்.ஸி காலேஜிலிருந்து எஃப்.எஸ்.ஸி படித்தார்கள். லாஹூர் அரசாங்க கல்லூரியில் பி.எஸ்.ஸி படித்தார்கள். பஞ்சாப் பல்கலை கழகத்தில் டாக்டர் அப்துல் ஸலாம் அவர்களின் தலைமையில் இயற்பியல் துறையில் எம்.எஸ்.ஸி படிப்பதற்கு நற்பாக்கியம் பெற்றார்கள். 1948 ஆம் ஆண்டு ஃபுர்கான் படையில் சேர்ந்து காஷ்மீரில் பணியமர்த்தப்பட்டார்கள். 1955 ஆம் ஆண்டு மர்ஹூம் பாகிஸ்தான் கடற்படையில் சேர்ந்தார்கள். அங்கு அவர்களுக்கு பாகிஸ்தான் கடற்படை அகாடமியில் பல முக்கிய பொறுப்புகளை வகித்தார்கள்.

மர்ஹூம் கடற்படையின் Eductional Sector ல் பள்ளி மற்றும் கல்லூரிகள் திறப்பது தொடர்பான திட்டங்களை வகுப்பதில் முக்கிய பணியாற்றினார்கள். பாகிஸ்தான் கடற்படையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு கனடா சென்று விட்டார்கள். ஓர் ஆண்டு ரொடண்டோ மிஷன் ஹவுஸில் வக்ஃபே ஆர்ஸி செய்தார்கள். அதன் பிறகு 1993 ஆம் ஆண்டு ஓய்விற்குப் பிறகு வக்ஃப் செய்வதற்கு விண்ணப்பம் செய்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

அன்னார் ஜமாஅத்திற்கு 18 ஆண்டுகள் தொண்டாற்றியுள்ளார்கள். அந்த காலகட்டத்தில் மர்ஹூம் சொத்து செயலராகவும், திருமண பந்த செயலராகவும், கூடுதல் மிஷன் ஹவுஸ் செயலராகவும், ஹோமியோபதி கிளினிக் உதவியாளராகவும் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார்கள். மர்ஹூம் மிகவும் மென்மையாக பேசக்கூடியவரும், பணிவான இயல்பு கொண்டவரும் ஆவார்கள். எல்லாரிடமும் பரிவுடன் நடந்து வந்தார்கள். தொழுகைகளை பேணக்கூடியவராகவும், கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பு கொண்டவராகவும் திகழ்ந்தார்கள். வக்ஃப் செய்த பிறகு தனது ஒவ்வொரு நொடியையும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் கழிப்பதற்கு முழுமையாக முயற்சி செய்தார்கள். கடந்த சிறிது காலமாக மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். உடல் நலம் சரியானதும் உடனடியாக மிஷன் ஹவுஸ் வந்து விடுவார்கள். இறுதி மூச்சு வரை மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதில் முழு மூச்சாக செயல்பட்டு வந்தார்கள். அன்னாரின் நினைவாக அன்னாரின் ஒரு மனைவியும், மூன்று மகன்களும் உள்ளனர். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் மர்ஹூமின் நன்மைகளை தொடரச் செய்யும் பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அன்னாரின் மருமகள் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா கூறுகின்றார்கள்: மர்ஹூம் மிகவும் பரிவான மற்றும் கருணை உள்ளம் படைத்தவராக இருந்தார்கள். மிகவும் நல்ல மனிதர் ஆவார்கள். மிகவும் நேர்மையுடன் வக்ஃபை நிறைவேற்றினார்கள். அன்னார் ஒரு முன்னுதாரணமான தந்தையாகவும், கணவராகவும் இருந்தார்கள். ஜமாஅத் மற்றும் இறைவனுடன் தொடர்பு, தொழுகைகளை முறையாக பேணுதல் தொடர்பாக மரணத்திற்கு முன்பு வரை தனது பிள்ளைகளுக்கு அறிவுரை செய்து வந்தார்கள். முழு வாழ்நாளும் தஹஜ்ஜுத் மற்றும் இதர தொழுகைகளை தானும் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார்கள்.

இரண்டாவது ஜனாஸா நஸாரத் உலியா துறையின் Driver மதிப்பிற்குரிய சமர் அஹ்மது ஷஃபீக் சாஹிப் அவர்களின் மனைவியாகிய ஷாஹினா சமர் சாஹிபா அவர்களுடையதாகும். இந்த ஷாஹினா சமர் சாஹிபா மற்றும் அன்னாருடைய மகன் அஸீஸ் சமர் அஹ்மது சமர் சாஹிப் ஆகியோர் நவம்பர் மாதம் 12 ஆம் தேதி 2020 ஆண்டு மதியம் 1 மணி அளவில் ஒரு சாலை விபத்தில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மரணத் தருவாயில் அன்னாரின் வயது 38 ஆக இருந்தது. அன்பிற்குரிய சமர் அஹ்மதின் வயது 17 ஆக இருந்தது. ஷாஹினா சமர் சாஹிபா தனது கணவர் மற்றும் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் மட்டுமல்லாமல் மூன்று சகோதரரையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் மகள் ஷாஹினா சமர் சாஹிபா கூறுகின்றார்கள்: எனது தாயார் மிகவும் நல்ல பெண்மணியாக இருந்தார்கள். எனக்கு எப்போதும் நன்மையை அறிவுறுத்தி வந்தார்கள். அன்னார் சுயம் எப்பொழுதும் நன்மையில் முதன்மையாக இருந்து வந்தார்கள். எல்லா விஷயங்களையும் என்னுடன் பகிர்ந்து வந்தார்கள். எனக்கு நல்ல தோழியாகவும் இருந்தார்கள். ஜமாஅத் பணிகளில் அவர்களுக்கு மிகவும் ஈடுபாடு இருந்து வந்தது. தனது அனைத்து விஷயங்களையும் என்னிடம் கூறி வந்தார்கள். தொண்டாற்றுவதற்கு எப்போதும் தயாராக இருந்து வந்தார்கள். அன்னாருடைய கணவரும் அன்னாரைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார். அதாவது மர்ஹூமா குறைவாக படித்திருந்தபோதிலும் குடும்பத்தை மிக நல்ல முறையில் நிர்வகித்து வந்தார். பிள்ளைகளுக்கும் உயர்தரமான தர்பிய்யத் வழங்கி இருந்தார்.

பிறகு அன்னாரின் மகனாகிய அன்பிற்குரிய சமர் அஹ்மது சாஹிப் அவர்களைப் பற்றிய குறிப்பு வருகின்றது. விபத்தில் அவரும், தனது தாயாருடன் மரணித்து விட்டார். தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவராக இருந்தார். அல்லாஹ்வின் அருளால் நன்கு படித்து வந்தார். காதிம்களுடன் பணிகளை மிக ஆர்வமுடனும், உணர்வுடனும் செய்து வந்தார். ஜமாஅத் பணிகளில் மிகவும் ஆர்வமாக இருந்து வந்தார்.

அவரின் தந்தை எழுதுகின்றார்: நான் சில முறை மூன்று, நான்கு நாட்கள் தொடர்ச்சியாக பயணத்தில் இருக்கும்போது, அப்பா நீங்கள் கவலைப்படாதீர்கள். குடும்பத்தை நான் பார்த்துக் கொள்வேன், நீங்கள் நிம்மதியுடன் உங்களது பணியை செய்து கொண்டிருங்கள் என்று கூறுவார். மிகவும் பொறுப்புள்ள பிள்ளையாக இருந்தார்.

சமர் அஹ்மது சாஹிபின் மூத்த சகோதரி சமீன் சாஹிபா கூறுகிறார்: எனது சகோதரர் மாஷா அல்லாஹ் மிகவும் நல்லவராக இருந்தார். அவருக்கு கோபம் வந்ததே கிடையாது. நான் அவரை திட்டி விட்டாலும் கூட அவர் கோபப்பட்டதே கிடையாது. இன்னும் சொல்வதென்றால், குழந்தைகளுடனும், சகோதர சகோதரிகளுடனும் மிகவும் அன்பு கொண்டிருந்தார். மற்ற சிறிய சகோதர சகோதரிகளும் இதையே எழுதியுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அல்லாஹ் இந்த முழு குடும்பத்திற்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. சிறிய பிள்ளைகளுக்கும் மேலும் அந்த பிள்ளைகளின் தந்தைக்கும் பொறுமையை வழங்குவானாக. அவரது ஒரு மகனும் மரணித்து விட்டார். மனைவியும் இறந்து விட்டார்.

அடுத்த ஜனாஸா முஹம்மது அஃப்ஸல் கோக்கர் சாஹிப் ஷஹீது அவர்களின் மனைவியாகிய ஸயீதா அஃப்ஸல் கோக்கர் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் அஷ்ரஃப் மஹ்மூத் கோக்கர் சாஹிப் ஷஹீது அவர்களின் தாயும் ஆவார்கள். அன்னாரின் கணவரும் ஷஹீதாகி இருந்தார்கள். மகனும் ஷஹீதாகி உள்ளார்கள். மர்ஹூமா 12 டிசம்பர் 2020 அன்று கனடாவில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

கணவன் மற்றும் மகனின் ஷஹாதத்திற்குப் பிறகு அன்னாருக்கு மிக கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிட்டது. ஆனால் அன்னார் ஒவ்வொரு கஷ்டத்தையும் மிகவும் பொறுமையுடனும் தைரியத்துடனும் எதிர்கொண்டார்கள். மிக சுய மரியாதையுடன் வாழ்க்கையை கழித்தார்கள். எப்போதும் எந்த முறையீடும் செய்தது கிடையாது. மூன்று பிள்ளைகளின் திருமணத்திற்கான கடமையையும் அழகிய முறையில் நிறைவேற்றினார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அன்னாருக்கு தனது மற்றொரு இளம் மகனாகிய ஆஸிஃப் மஹ்மூது கோக்கர் சாஹிபின் திடீர் மரணத்தின் துன்பத்தையும் சகித்துக் கொள்ள நேரிட்டது. அந்த சந்தர்ப்பத்திலும் மிகவும் பொறுமையுடன் செயல்பட்டார்கள். தனது அனைத்து அன்பர்களுடனும் அன்புடன் நடந்து கொண்டார்கள். நல்ல விருந்து உபசரிப்பு செய்பவராக இருந்தார்கள். ஏழைகளை பராமரிப்பவராகவும் இருந்தார்கள்.

கிலாஃபத்துடன் அன்பும், மரியாதையும் பற்றும் கொண்டவராகவும் இருந்தார்கள். ஜமாஅத்தின் திட்டங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெற்று வந்தார்கள். முழு வாழ்நாளிலும் தனது பெற்றோர்கள், தனது ஷஹீது கணவர் மற்றும் மகன்களின் பெயரால் தான தர்மங்களை செய்து வந்தார்கள். அன்னாரின் பெற்றோர் மதிப்பிற்குரிய அஃப்ஸல் கரீம் சாஹிப் மற்றும் சுக்ரா பேகம் சாஹிபா அஹ்மதிய்யத்தின் அர்ப்பணிப்பு கொண்ட நபர்களாக இருந்தனர். அன்னார் மதிப்பிற்குரிய மிர்ஸா முஜீப் அஹ்மது சாஹிப் மற்றும் மிர்ஸா அஃப்ஸலுர் ரஹ்மான் சாஹிப் ஆகியோரின் மூத்த சகோதரியாக இருந்தார்கள்.

மர்ஹூமா அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னார் தனது நினைவாக தனது மகன் மதிப்பிற்குரிய பிலால் அஹ்மது கோக்கர் சாஹிப் அவர்களையும் தய்பிபா குரைஷி சாஹிபா, தாஹிர் மாஜித் சாஹிபா மற்றும் சமீனா கோக்கர் சாஹிபா என்ற மூன்று மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமாவின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அவர்களின் பிள்ளைகளுக்கும் தனது தாயின் நன்மைகளை தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

## திருக்குர்ஆனிலிருந்து...

இவர்களுக்கு முன்னர் எத்தனையோ தலைமுறையினர்களை நாம் அழித்திருப்பதையும், ஒருபோதும் அவர்கள் இவர்களிடம் திரும்பி வராமலிருப்பதையும் இவர்கள் காணவில்லையா? மேலும் அவர்கள் எல்லாரும் ஒன்று திரட்டப்பட்டு நிச்சயமாக எம்மிடம் கொண்டு வரப்படுவர். (36:32)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க நான்கு கலீஃபாக்களில் ஒருவரும், அன்னாரின் மருமகனுமான ஹஸ்ரத் அலி (ரலி)அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 நவம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **27 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

الَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை தன்னுடன் சேர்த்துக் கொண்டார்கள். அதன் பிறகு அதே அலி (ரலி) அவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இறுதி மூச்சு வரை இருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அன்னார் கலீஃபாவாகவும் ஆனார்கள். அன்னார் மார்க்கத்திற்கு அடித்தளமிட்டார்கள். அதேபோன்று அல்லாஹ் அன்னாரின் சந்ததியினரை நல்லவர்களாக்கினான். மேலும் 12 தலைமுறை வரை தொடர்ச்சியாக 12 இமாம்கள் தோன்றினர்.

(இஃப்திதாஹி தக்ரீர் ஜல்ஸா ஸாலானா 1955, அன்வாருல் உலூம் தொகுதி 25 பக்கம் 187,188)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஈமான் கொண்டபோது சிறுவராக இருந்தார்கள். இருந்தபோதிலும் தனக்கு இஸ்லாத்திற்காக எல்லாவித துன்பங்களையும் சகிக்க நேரிடும் என்பதை அறிந்தே ஈமான் கொண்டிருந்தார்கள். சிறுவராக இருந்தார்கள். இருந்தபோதிலும் எனக்கு தியாகங்கள் செய்ய நேரிடும். எந்த அளவுக்கென்றால் தனக்கு உயிரை அர்ப்பணிக்கும் நேரம் வந்தால் உயிரையும் அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணிப்பேன் என்பதை புரிந்து கொண்டுதான் இஸ்லாத்தின்மீது ஈமான் கொண்டார்கள்.

ஹதீஸில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது நபித்துவ காலத்தின் ஆரம்ப நாட்களில் ஒரு விருந்திற்கு அழைத்தார்கள். அதில் பனூ அப்துல் முத்தலிபை அழைத்தார்கள். ஏனென்றால் அவர்களுக்கு உண்மையான தூதுச் செய்தி சென்றடைய வேண்டும் என்று விரும்பினார்கள். அதன் காரணமாக அந்த விருந்தில் அன்னாரின் ஏராளமான உறவினர்கள் பங்கு பெற்றார்கள். மக்கள் உணவு உண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்த விரும்பினார்கள். ஆனால் அவர்கள் அனைவரையும் அபூலஹப் கலைத்து விட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை கேட்காமலேயே மக்கள் தத்தமது வீட்டிற்கு சென்று விட்டனர். இந்த மக்கள் நல்ல மக்களா? இவர்கள் உணவு உண்டு விட்டு விஷயத்தை கேட்காமலேயே சென்று விட்டார்களே? என்று அன்னாருக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. எனினும் அன்னார் நிராசை அடைந்து விடவில்லை. மாறாக, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் மீண்டும் அவர்களை விருந்திற்கு அழைக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எனவே இரண்டாவது முறையாக அவர்கள் அனைவரும் விருந்திற்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் உணவு உண்டு விட்ட பிறகு சபையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, பாருங்கள்! அல்லாஹ் உங்கள் மீது எத்தனை கருணை செய்துள்ளான். அவன் உங்கள் மத்தியில் தனது நபியை அனுப்பியுள்ளான். நான் உங்களை இறைவன் பக்கம் அழைக்கின்றேன். நீங்கள் எனது விஷயத்தை செவிமடுத்தால் நீங்கள் மார்க்கம் மற்றும் உலகத்தின் அருட்கொடைகளுக்கு வாரிசாக்கப்படுவீர்கள். இந்த பணியில் எனக்கு உதவியாளராக திகழ்வதற்கு எவரும் உள்ளாரா? என்று கேட்டார்கள்.

இதைக்கேட்டு முழு சபையிலும் நிசப்தம் சூழ்ந்தது. ஆனால் திடீரென மூலையிலிருந்து ஒரு சிறுவர் எழுந்தார். நான் மிக பலவீனமான நபராக இருக்கலாம். வயதில் அனைவரையும் விட சிறுவனாக இருக்கலாம். எனினும் நான் தங்களுக்கு உதவி செய்வேன் என்று அவர் கூறினார். அந்த சிறுவர் ஹஸ்ரத் அலி (ரலி) ஆவார். அப்போது இஸ்லாத்திற்கு உதவி செய்வதாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிப்புச் செய்தார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 24,25)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த நேரத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் செய்த தியாகத்தின் சம்பவம் பற்றியும் இவ்வாறு குறிப்பு இடம் பெற்றுள்ளது. மக்கத்துவாசிகள் தங்களுக்குள் ஆலோசனை செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி அன்னாரை கைது அல்லது கொலை செய்ய திட்டம் தீட்டியபோது வஹீயின் மூலமாக எதிரிகளின் இந்த எண்ணத்தைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி நல்கியிருந்தான். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹிஜ்ரத் செய்வதற்கு தயார் ஆனார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம், இன்று இரவு தமது படுக்கையில் படுத்துக் கொள்ளும்படி வழிகாட்டினார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்தி வந்த சிவப்பு நிறப் போர்வையை போர்த்திக் கொண்டு இரவைக் கழித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 1 பக்கம் 176 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குறி வைத்து அமர்ந்திருந்த இணைவைப்பவர்களின் கூட்டம் காலை நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்குள் நுழைந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் படுக்கையிலிருந்து எழுந்தார்கள். எதிரிகள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை நெருங்கியதும் அன்னாரை அடையாளங்கண்டு கொண்டார்கள். மேலும் உங்களது தோழர் எங்கே? என்று கேட்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி விசாரித்தார்கள். அதற்கு எனக்குத் தெரியாது. நான் என்ன ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்காணிப்பாளரா? என்று கேட்டார்கள். நீங்கள் அன்னாரை மக்காவை விட்டு வெளியேறும்படி கூறினீர்கள். அவர்களும் சென்று விட்டார்கள் என்று கூறியபோது, இணைவைப்பவர்கள் அன்னாரை ஏசிப்பேசினார்கள். மேலும் பிடித்து அடித்தார்கள். பிறகு கஃபாவிற்கு கொண்டு சென்று சிறிது நேரம் கட்டி வைத்தார்கள். பிறகு விடுவித்து விட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 2 பக்கம் 256 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

பின்னர் மற்றொரு வாழ்க்கை வரலாறு புத்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மக்கத்துவாசிகளுக்குரிய அமானிதங்களை திருப்பிக் கொடுத்து விட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு ஹிஜ்ரத் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்று விட்டார்கள். மேலும் அன்னார் குபா உம்மே குல்ஸூம் பின் ஹதம் அவர்களிடத்தில் தங்கினார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம் பக்கம் 348... – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் ஹிஜ்ரத் தொடர்பான சம்பவத்தில் இது குறித்து இவ்வாறு குறிப்பு இடம் பெற்றுள்ளது. இருள் சூழ்ந்த இரவு நேரமாக இருந்தது. பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்த அநீதியாளர்களான குரைஷிகள் கொலைகார திட்டத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை சுற்றி வளைத்து ஒன்றுகூடி இருந்தார்கள். விடியட்டும் அல்லது அன்னார் தனது வீட்டை விட்டு வெளியேறட்டும். அவ்வாறு நிகழ்ந்தால் அன்னார் மீது திடீரென தாக்குதல் தொடுத்து கொலை செய்து விடலாம் என்ற திட்டத்தில் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நிராகரிப்பாளர்களின் சில அமானிதங்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஏனென்றால் மிகவும் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பெரும்பாலான மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் நேர்மையின் காரணமாக அன்னாரிடம் அமானிதங்களை ஒப்படைத்து வந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அந்த அமானிதங்களின் கணக்கு வழக்கு விவரங்களை புரிய வைத்திருந்தார்கள். மேலும் அந்த அமானிதங்களை திருப்பி ஒப்படைக்காமல் மக்காவை விட்டு வெளியேறக் கூடாது என்றும் வழிகாட்டி இருந்தார்கள். அதன் பிறகு எனது படுக்கையில் நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு அல்லாஹ்வின் அருளால் எந்த

தீங்கும் ஏற்படாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் படுக்கையில் படுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சிவப்பு நிற போர்வையை அன்னார் மீது போர்த்தி விட்டார்கள். அதன் பிறகு அல்லாஹ்வின் பெயரைக்கூறி தனது வீட்டை விட்டு வெளியேறினார்கள். அந்நேரத்தில் எதிரிகள் அன்னாரின் வீட்டை சுற்றி வளைத்திருந்தார்கள். மேலும் அன்னாரின் வாசலுக்கு முன்புதான் அமர்ந்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவின் முதல் பகுதியிலேயே வீட்டை விட்டு வெளியேறுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. மேலும் அவர்கள் எந்த அளவிற்கு கவனக்குறைவாக இருந்தார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எதிரிகளின் கண்களில் மண்ணை தூவி விட்டு அவர்களுக்கு முன்னாலேயே வெளியேறி விட்டார்கள். அவர்களால் அதை அறிய முடியாமல் போனது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக, ஆனால் அத்துடன் வேக வேகமாக மக்காவின் வீதிகளை கடந்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திலேயே ஊரை விட்டு வெளியேறி விட்டார்கள். மேலும் சவ்ர் குகை வழிப்பாதையை சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் ஏற்கனவே எல்லா விஷயங்களும் தீர்மானிக்கப்பட்டிருந்தன. அன்னாரும் வழிப்பாதையில் வந்தடைந்தார்கள். சவ்ர் குகை இந்த சம்பவத்தின் காரணமாக இஸ்லாத்தில் ஒரு புனிதமான நினைவுச் சின்னமாக கருதப்படுகிறது. மக்காவிலிருந்து தெற்கு பக்கமாக அதாவது மதீனாவிலிருந்து பல்வேறு திசைகளில் மூன்று மைல் தொலைவில் ஒரு குன்றின் மீது உயரத்தில் அமைந்துள்ள இடம் சவ்ர் குகையாகும். அதனுடைய வழிப்பாதை மிகவும் கடினமான பாதையாகும். அது மதீனாவை நோக்கி அல்ல. மாறாக எதிர் திசையில் அது அமைந்துள்ளது. அங்கு சென்றடைந்த உடன் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளே நுழைந்து இடத்தை சுத்தம் செய்தார்கள். அதன் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் உள்ளே சென்று விட்டார்கள்.

மற்றொரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை சுற்றி வளைத்திருந்த குரைஷிகள் சிறிது நேத்திலேயே அன்னாரின் வீட்டை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இடத்தில் படுத்திருந்தார்கள். அதைப் பார்த்து அவர்கள் மன நிறைவு அடைந்திருந்தார்கள். ஆனால் பொழுது விடிந்ததும் அவர்களின் இரை கைநழுவி விட்டது என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. அதனால் அவர்கள் இங்கும் அங்கும் ஓடினார்கள். மக்காவின் வீதிகளில், சஹாபாக்களின் வீடுகளில் சோதனை நடத்தினார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அந்தக் கோபத்தில் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை பிடித்து அடித்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 236,237)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த தியாகத்தின் குறிப்பைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வீட்டை விட்டு வெளியேறும் சமயத்தில் தனது படுக்கையில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை கிடத்தினார்கள். கட்டில் பயன்படுத்தும் பழக்கம் அக்காலத்தில் இல்லை. இன்னும் சொல்லப்போனால் இன்றைய காலத்திலும் கூட மக்காவில் கட்டில் பயன்படுத்தும் பழக்கம் இல்லை.

சில அறிவிப்புகளில் தவறுதலாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை தனது கட்டிலில் கிடத்தினார்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். அக்காலத்தில் படுக்கை தயாரிக்கப்பட்டு வந்தது. ஆனால் முறையாக கட்டில் பயன்படுத்தப்படவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு நேரத்தில் அந்த மக்களை கடந்து சென்றார்கள். அப்போது அவர்களில் சிலர் அன்னாரை கண்டார்கள். இருந்தபோதிலும் அவர் வேறு ஒரு நபர்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்து விட்டு யாரோ ஒருவர் திரும்பிச் செல்கின்றார் என்று எதிரிகள் நினைத்துக் கொண்டனர்.

அதற்கு காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிகவும் தைரியத்துடன் தனது வீட்டை விட்டு வெளியேறினார்கள். அன்னாரின் இயல்பில் அணுவளவும் அச்சம் இல்லாமல் இருந்தது. எனவே இவ்வளவு தைரியத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வீட்டை விட்டு எவ்வாறு வெளியேற முடியும் என்று எதிரிகள் எண்ணினர். எனவே நிச்சயமாக இவர் வேறு ஒரு நபர் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்து விட்டு யாரோ ஒருவர் திரும்பிச் செல்கின்றார் என்றே அவர்கள் எண்ணினர்.

இதற்குப் பிறகு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியேறிவிடவில்லையே என்பதை உறுதி செய்ய கதவின் ஓட்டை வழியாக எட்டிப் பார்த்தார்கள். அப்போது ஒரு நபர் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். அவர்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்று எதிரிகள் எண்ணம் கொண்டனர். சுருக்கமாக, முழு இரவும் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை காவல் காத்துக் கொண்டிருந்தனர். பிறகு உரிய நேரத்தை அறிந்து உள்ளே நுழைந்தனர். உடல் அமைப்பை பார்த்து இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்ல என்று அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம். அப்போது அவர்கள் முகத்திலிருந்து துணியை அகற்றினார்கள். அப்போது அவர்களுக்கு, தூங்கக் கூடியவர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்ல என்பது தெரிய வந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாதுகாப்புடன் வெளியேறி விட்டார்கள். இனி தங்களுக்கு தோல்வியைத் தவிர எதுவும் எஞ்சியிருக்கவில்லை என்பதை எதிரிகள் கண்டு கொண்டனர். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 510)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு மகத்துவமிக்க இந்த தியாகத்தை செய்யும் நற்பாக்கியத்தை வழங்கினான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்வதற்காக இரவு நேரத்தில் தனது வீட்டை விட்டு வெளியேறினார்கள். அப்போது நீங்கள் எனது படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நிராகரிப்பாளர்கள் எட்டிப் பார்த்தாலும் படுக்கையில் ஒருவர் உறங்கிக் கொண்டிருக்கின்றார் என்று அவர்களுக்கு தென்பட வேண்டும். மேலும் பின்தொடர்வதற்கு அவர்கள் இங்கும் அங்கும் செல்லாமல் இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! வீட்டை சுற்றிலும் குரைஷிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் கையில் வாள் ஏந்திக் கொண்டு நிற்கின்றார்கள். பொழுது விடிந்ததும் தாங்கள் வீட்டை விட்டு வெளியேறிவிட்டீர்கள் என்பது அவர்களுக்கு தெரிய வந்தால் அவர்கள் என்மீது தாக்குதல் நடத்தி என்னை கொலை செய்து விடுவார்களே! என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஒருபோதும் கூறவில்லை. மாறாக, மிக மன நிறைவுடன் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படுக்கையில் படுத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது போர்வையை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீது போர்த்தி விட்டார்கள்.

பொழுது விடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பதிலாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாரின் படுக்கையில் படுத்துள்ளார்கள் என்பதை குரைஷிகள் கண்டு கொண்டதும் அவர்கள் தனது தோல்வியால் தலையை தொங்க போட்டுக் கொண்டு இருந்தார்கள். மேலும் அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை பிடித்து அடித்தார்கள். ஆயினும் அதனால் என்னவாகிவிடப் போகின்றது! இறைவனின் கூற்று முழுமையாகி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாதுகாப்புடன் மக்காவை விட்டு வெளியேறி விட்டார்கள். அந்நேரத்தில் தனது இந்த ஈமானிற்கு பகரமாக என்ன கிடைக்கப் போகிறது என்பதை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆயினும் அல்லாஹ் நன்கறிந்திருந்தான். அந்த தியாகத்திற்கு பகரமாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மட்டும் கண்ணியம் பெறப்போவதில்லை. மாறாக, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சந்ததிகளும் கண்ணியம் பெறும் என்பதை அல்லாஹ் அறிந்திருந்தான்.

எனவே அல்லாஹ் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீது செய்த முதலாவது அருள் என்னவென்றால், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனாக ஆகும் கண்ணியம் கிடைத்தது. பிறகு அல்லாஹ் செய்த இரண்டாவது அருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மீது எந்த அளவுக்கு அன்பு ஏற்பட்டது என்றால் அன்னார் (ஸல்) அவர்கள் பல முறை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை பாராட்டியுள்ளார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 25)

எவ்வாறிருப்பினும் நான் ஒரே சம்பவத்தை பல்வேறு வழிமுறைகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் எடுத்துரைத்துள்ளேன். எனினும் அசல் சம்பவத்தின் அடிப்படையில் விஷயம் ஒன்றுதான். நான் பல்வேறு வடிவில் அதனை எடுத்துரைத்துள்ளேன். ஏனென்றால் அதனுடைய விளக்கத்தின் மூலமாக சில புதிய விஷயங்களும் நமக்கு தெரிய வருகின்றன. அல்லது புதிய கோணத்தில் சம்பவம் எடுத்துரைக்கப்படுகின்றது. அதன் மூலம் பல அம்சங்கள் நமக்கு தெரிய வருகின்றன. அல்லது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் பல்வேறு அம்சங்கள் நமக்கு தெரிய வருகின்றன. ஒவ்வொரு சஹாபியுடனும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இருந்த தொடர்பும் நமக்கு தெரிய வருகின்றது. ஒரே சம்பவம் பல்வேறு இடங்களில் எடுத்துரைக்கப்படுகின்றது என்று சில முறை தோன்றலாம். ஆனால் அதன் கோணம் பலவகைப்பட்டதாக இருக்கும். நான் எல்லா ஆதாரங்களையும் எடுத்துரைக்கின்றேன். இங்கு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் தொடர்பாகவும் பல ஆதாரங்களை எடுத்துரைத்திருக்கின்றேன். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. எஞ்சிய குறிப்பை பிறகு நான் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைப்பேன். மேலும் அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். அவர்களில் முதலாம் நபர், தாரிக் மஹ்மூது அவர்களின் மகனாகிய டாக்டர் தாஹிர் மஹ்மூது சாஹிப் ஷஹீது ஆவார்கள். அன்னாரை எதிரிகள் நவம்பர் மாதம் 20 ஆம் தேதி அதாவது கடந்த வாரம் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு (துப்பாக்கியால்) சுட்டு ஷஹீதாக்கி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

கிடைத்த விவரங்களுக்கேற்ப ஷஹீது மர்ஹூம் தனது தந்தை தாரிக் மஹ்மூது சாஹிப் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுடன் நவம்பர் மாதம் 20 ஆம் தேதி

ஜுமுஆ தொழுகைக்காக தனது பெரியப்பா மதிப்பிற்குரிய முஹம்மது ஹபீஸ் சாஹிப் அவர்களின் வீட்டில் ஒன்றுகூடியிருந்தார்கள். ஜுமுஆ தொழுகையை முடித்து விட்டு சுமார் 2.30 மணி அளவில் தனது வீட்டிற்கு செல்வதற்காக வெளியேறினார்கள். அப்போது மஹது என்ற பெயர் கொண்ட 16 வயது இளைஞன் கையில் துப்பாக்கியுடன் தெருவில் நின்று கொண்டிருந்தான். அவன் துப்பாக்கியால் சுட்டான். அதன் விளைவாக டாக்டர் தாஹிர் மஹ்மூது சாஹிப் அவர்கள் நிகழ்விடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் வயது 31 ஆக இருந்தது. இந்த தாக்குதலில் 55 வயதான ஷஹீது மர்ஹூமின் தந்தை தாரிக் மஹ்மூது சாஹிப் அவர்கள் குண்டு பாய்ந்ததன் விளைவாக படுகாயம் அடைந்துள்ளார்கள். அன்னார் செகரட்டரி மால் ஆகவும், ஜமாஅத்தின் முன்னாள் சதர் ஆகவும் இருந்தார்கள். தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அதே நேரத்தில் ஜமாஅத்தின் சதர் மற்றும் ஷஹீது மர்ஹூமின் 60 வயதான பெரியப்பா மதிப்பிற்குரிய சயீது அஹ்மது மக்ஸூது சாஹிப் அவர்களும், 26 வயதான மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஸயீம் ஆகிய மதிப்பிற்குரிய தய்யிப் மஹ்மூது சாஹிப் அவர்களும் துப்பாக்கிச் சூட்டின் காரணமாக காயமடைந்தார்கள். அவர்கள் சிறிதுநேரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள். பிறகு குணமடைந்து விட்டார்கள். ஆனால் ஷஹீது அவர்களின் தந்தையார் மிகவும் காயமுற்றுள்ளார்கள். தாக்குதல் நடத்தியவர் இரண்டு முறை துப்பாக்கியை லோடு செய்து விட்டு மூன்றாவது முறை லோடு செய்யும்போது பிடிபட்டு விட்டான்.

ஆனால் எவ்வாறிருப்பினும் பகைமையின் ஒரு புதிய வடிவம் இந்த வடிவில் தற்போது அங்கு வெளிப்படத் தொடங்கியுள்ளது. எதிரிகள் சிறிய வயதுடைய இளைஞர்களை இந்த பணிக்காக தேர்ந்தெடுக்கின்றனர். மேலும் அவர்கள் மூலமாக தாக்குதல் நடத்துகின்றனர். ஏனென்றால் இவ்வாறு செய்வதன் மூலம் பிற்காலத்தில் நீதிமன்றத்தில் அவர்கள் பருவ வயதை அடையவில்லை. எனவே அவர்களின் தண்டனையை குறைக்க வேண்டும். அல்லது தண்டனையை மன்னிக்க வேண்டும் என்று கூறுவதற்காக இவ்வாறு செய்கின்றனர். ஆக எதிரிகள் பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வருகின்றனர். மற்றொரு பக்கம் எங்களுக்கு எந்தப் புகாரும் இல்லை. நாங்கள் முற்றிலும் எந்த கடுமையும் காட்டுவதில்லை. அஹ்மதிகள் மீது எந்த ஆகுமற்ற அநீதியும் இழைப்பதில்லை என்று கூறுகின்றனர். ஆனால் அதே நேரம் ஷஹாதத் சம்பவங்களும் நிகழ்ந்து வருகின்றன. அரசாங்கத்தின் சில அதிகாரிகள் வலுக்கட்டாயமாக வழக்குகளையும் தொடுக்கின்றனர். எவ்வாறிருப்பினும் இந்த மக்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. அவ்வாறில்லையென்றால் அல்லாஹ் சுயமே அவர்களை பிடிப்பானாக. மர்ஹூமின் குடும்பத்தில் அன்னாரின் பாட்டனார் மதிப்பிற்குரிய ஹக்கீம் முஹம்மது இப்ராஹீம் சாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் தனது ஏனைய குடும்பத்தினருடன் 13 வயதில் இரண்டாவது கிலாஃபத் காலகட்டத்தில் பைஅத் செய்திருந்தார்கள்.

ஷஹீது மர்ஹூம் லாஹூர் இஸ்லாமியா கல்லூரியிலிருந்து FSC படித்து முடித்திருந்தார்கள். அதன் பிறகு 2013 ஆம் ஆண்டு ரஷ்யாவிலுள்ள மாஸ்கோவில் MBBS பட்டம் பெற்றார்கள். இன்றைய நாட்களில் PMC என்ற தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். மேலும் ஃபஸ்லே உமர் மருத்துவமனையிலும் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் எண்ணற்ற சிறப்புகளைக் கொண்டிருந்தார்கள். கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்கள். ஜமாஅத் பொறுப்பாளர்கம் மீதும், தலைமையக விருந்தினர்கள் மீதும் எல்லையற்ற கண்ணியம் கொண்டிருந்தார்கள். ஜமாஅத் வேலைக்காக எப்போது அழைக்கப்பட்டாலும் உடனடியாக வந்து விடுவார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆக தொண்டாற்றும் நற்பேறும் கிடைத்திருந்தது. பல முறை நோயாளிகளை தன் சொந்த வண்டியில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார்கள். எப்பொழுதும் தொண்டு செய்வதற்கு முன்னணியில் இருந்து வந்துள்ளார்கள். அன்னாருக்கு ஜமாஅத் அல்லாதவருடனும் தொடர்பு இருந்தது. பல கண்ணியமிக்க அஹ்மதி அல்லாத நபர்களும் வருகை தந்து தனது இரங்கலை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இந்த குடும்பம் நீண்ட காலமாகவே கடும் எதிர்ப்பை சந்தித்து வந்ததுள்ளது. 1974 ஆம் ஆண்டிலும் எதிரிகள் ஷஹீது மர்ஹூமின் பாட்டனாரின் இரண்டு கடைகளை எரித்திருந்தார்கள். 2006 ஆம் ஆண்டு மர்ஹூமின் தந்தை தாரிக் மஹ்மூது சாஹிப் அவர்களை எதிரிகள் அநீதியான வழிமுறைகளில் அன்னாரின் மீது வன்முறை நிகழ்த்தி இருந்தார்கள். சில நாட்களுக்கு முன்பு ஷஹீது மர்ஹூமின் தந்தையார் கடை வீதியை கடந்து சென்று கொண்டிருக்கும்போது அஹ்மதிய்யத்தின் ஒரு எதிரி அன்னாரின் முகத்தில் உமிழ்ந்தான். இதுபோன்ற செயல்களை எதிரிகள் தொடர்ந்து செய்து வந்தனர். எவ்வாறிருப்பினும் இவர்கள் அங்கு நிலைபெற்றிருக்கின்றார்கள்.

ரஷ்யா செண்ட் பீட்டர் பர்க் நகரைச் சார்ந்த சதாகத் அஹ்மது முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கல்வி வாழ்க்கையின் ஒரு பெரும் பகுதி கஜகஸ்தான் ரஷ்யாவில் கழிந்தது. மர்ஹூம் வெற்றிகரமான டாக்டர் ஆக பட்டம் பெற்று பாகிஸ்தான் சென்றார்கள். டாக்டர் தாரிக் மஹ்மூது சாஹிப் அவர்கள் கல்வி பயிலும் காலத்தில் ஜமாஅத்துடன் மிகவும் கலப்பற்றதன்மை கொண்ட தொடர்பை வைத்திருந்தார்கள். ஜுமுஆ தொழுகை மற்றும் சந்தாக்களை செலுத்துவதை எப்பொழுதும் முறையாக பேணி வந்தார்கள். அன்னாரின் தங்கும் விடுதி மிஷன் ஹவுஸிலிருந்து வெகு தொலைவில் இருந்தபோதிலும் ஜமாஅத்தின் ஏனைய நிகழ்ச்சிகளில் தொடர்ந்து ஆர்வத்துடன் கலந்து வந்தார்கள். மெடிக்கல் குழுவின் மிகவும் புத்திசாலியான மாணவர்களில் அன்னாரும் ஒருவர் ஆவார். அன்னார் ஆங்கில கல்வி முறையை கற்று வந்தபோதிலும் தனிப்பட்ட ஆர்வம் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் ரஷ்ய மொழியிலும் போதுமான அளவிற்கு புலமை பெற்றிருந்தார். அன்னார் காஸான் என்ற எந்த தங்கும் விடுதியில் தங்கி இருந்தார்களோ அங்கு தான் அஹ்மதி என்பதை அனைவரிடமும் கூறியிருந்தார்கள். அதன் காரணமாக அனைவரிடமும் எதிர்ப்பை சந்திக்க நேர்ந்தது. ஏனென்றால் அங்கு பாகிஸ்தானிய மாணவர்களும் இருந்தார்கள். அவர்களில் கடுமையாக எதிர்க்கக் கூடிய மாணவர்களும் இருந்தனர். ஆயினும் வாய்ப்பு கிடைக்கும்போது மர்ஹூம் அவர்களுக்கும் தப்லீக் செய்து வந்தார்கள். நான் பாகிஸ்தான் சென்றிருந்தபோது அங்கு என்னை சந்தித்தார்கள். மேலும் மெடுபலுசான் என்ற இடத்திலும் எங்களுக்கு கடும் எதிர்ப்பு உள்ளது. எனவே ரப்வாவிற்கு இடம்பெயர விரும்புகின்றோம் என்று என்னிடம் அன்னார் கூறினார்கள். ரப்வாவில் அவர்கள் வீடும் கட்டியிருந்தார்கள்.

ஃபரீத் இப்ராகீமோஃப் காஸான் தாரிஸ்தான் என்ற ரஷ்யன் அஹ்மதி ஒருவர் கூறுகின்றார்: மர்ஹூம் ரஷ்ய மொழியை விரைவாக கற்றுக் கொண்டார்கள். மிகவும் இனிய நற்குணங்களுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். அன்னாரின் புன்சிரிப்பில் ஒளி வீசிக் கொண்டிருந்தது. மர்ஹூம் தனது நினைவாக தனது தந்தை தாரிக் மஹ்மூது சாஹிப் அவர்கள் மட்டுமின்றி, தாயார் மதிப்பிற்குரிய ஷமீம் அக்தர் சாஹிபா அவர்களையும், சகோதரர் காஸிம் அக்தர் சாஹிப் அவர்களையும், சகோதரி ஃபாயிஸா மஹ்மூது சாஹிப் அவர்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் ஷஹீது மர்ஹூமின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயர்ந்த இடத்தை வழங்குவானாக. காயமுள்ளவர்களுக்கு இறைவன் உடல் நலத்தை வழங்குவானாக. மேலும் முழுமையான மற்றும் விரைவான குணத்தை வழங்குவானாக. காயமுற்ற அனைவரையும் எல்லா வகையான கஷ்டங்களிலிருந்தும் பாதுகாப்பானாக. மேலும் மர்ஹூமின் எஞ்சிய அனைத்து அன்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அல்லாஹ் தனது அருட்களையும், ரஹ்மத்துகளையும் வழங்கிக் கொண்டே இருப்பானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய ஜமாலுத்தீன் மஹ்மூது சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் சிராலியோன் நாட்டின் தேசிய ஜெனரல் செகரட்டரியாக இருந்தார்கள். நவம்பர் மாதம் 3 ஆம் தேதி திடீரென மாரடைப்பு ஏற்பட்டதன் காரணமாக மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூம் கடந்த 16 ஆண்டுகளாக ஜெனரல் செகரட்டரியாக தொண்டாற்றி வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

மிஷனரி இன்சார்ஜ் மதிப்பிற்குரிய சயீதுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூமின் ஏனைய பல சிறப்புகளுக்கு மத்தியில் ஒரு பெரும் சிறப்பு என்னவென்றால், முழு உலக அஹ்மதிகளையும் சமுதாய நேசத்திலிருந்து வெளியேற்றி ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்களாக ஆக்குவதற்கு செயல் முன்மாதிரி உடையவராக இருந்தார்கள். மிகவும் நுட்பத்துடனும், கலப்பற்றத்தன்மையுடனும் பணி செய்து வந்தார்கள். சுமார் 2000 நபர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையிலும் நல்லடகத்திலும் பங்கு பெற்றிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் இரண்டு அரசாங்க அமைச்சர்களும், சிராலியோனின் தலைமை இராணுவ அதிகாரியும், பல பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராமவுண்ட் சீஃப் உட்பட ஏராளமான அரசாங்க அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் செயலர் முபாரக் தாஹிர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: மர்ஹூம் மிகவும் கலப்பற்ற தன்மை கொண்ட, அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட, உள்ளத்தாலும் உயிராலும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடிய நபராக இருந்தார்கள். நீண்ட காலமாக ஜெனரல் செகரட்டரியாக தொண்டாற்றும் நற்பேறு பெற்று வந்தார்கள். மேலும் சிரோலியோனின் அஹ்மதிய்யா பிரிண்டிங் பிரஸ்ஸின் துணை மேலாளராக இருந்து வந்தார்கள். மர்ஹூம் கானாவைச் சார்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் மதிப்பிற்குரிய இப்ராஹீம் சாஹிப் அவர்களை மதிப்பிற்குரிய ஹஸ்ரத் மவ்லானா நஸீர் அஹ்மது சாஹிப் முபஷ்ஷிர் அவர்கள் கல்வித் துறையில் தொண்டாற்றுவதற்காக சிராலியோன் அனுப்பி வைத்திருந்தார்கள். 13 ஆண்டுகள் வரை ஜமால் சாஹிப் ரோகோபோர் என்ற இடத்தில் என்னுடன் தங்கி இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் கல்விக்காக

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்களது இறைவனிடமிருந்துள்ள அடையாளங்களில் எந்த அடையாளம் அவர்களிடம் வந்தாலும் அதனை அவர்கள் புறக்கணிக்கவே செய்கின்றனர். (36:47)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

EDITOR
Moulavai.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavai. ABDUR RAHMAN THAIR
Mobile : + 91 96774-14441
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 14 January 2021 Issue No. 2

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்னாரை என்னுடன் விட்டு வைத்திருந்தார்கள். மர்ஹூம் துவக்கம் முதலே மார்க்கப் பற்று உடையவர்களாக இருந்தார்கள். ஜமாஅத்தாக தொழுவதிலும், ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதிலும் முன்னனியில் இருந்து வந்தார்கள். ரோகோபோர் எனும் இடத்தின் இளைஞர்களுடன் இணைந்து தப்லீக் மற்றும் மார்க்கத்தை பரப்புகின்ற பணியை செய்து வந்தார்கள்.

உஸ்மான் தாலீ சாஹிப் இன்சார்ஜ் ரகீம் பிரஸ் சிரோலியோன் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஜமாலுத்தீன் சாஹிப் அவர்கள் எனக்கு முன்பு அங்கு நீண்ட காலம் தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். இன்சார்ஜ் ஆகவும் இருந்தார்கள். நான் அன்னாருடன் 12 வருடங்கள் கழித்துள்ளேன். இடைப்பட்ட இந்த காலத்தில் நான் அவர்களை விட சிறியவன் மற்றும் அனுபவமற்றவன் என்பதை அன்னார் ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. மாறாக, எப்பொழுதும் என்னுடன் கண்ணியத்துடன் நடந்து வந்துள்ளார்கள். மேலும் நீங்கள் முபல்லிக் ஆவீர்கள். உங்களை கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நியமனம் செய்துள்ளார்கள் என்று கூறி வந்தார்கள். அன்னார் எந்தவொரு விவகாரத்திலும் எனக்கு கட்டுப்படாமல் இருந்ததேயில்லை. கட்டுப்படுதலும், பணிவும் அன்னாரிடம் நிறைந்து காணப்பட்டது. எப்போது எந்தப் பணியை அவர்களிடம் கூறினாலும் உடனடியாக அதனை செய்யத் தொடங்கி விடுவார்கள். சாத்தியமான எல்லா வழிமுறைகளிலும் முயற்சி செய்து அதனை முழுமை செய்வார்கள்.

நான் இடைப்பட்ட காலத்தில் அன்னாரிடமிருந்து நிறைய கற்றுள்ளேன். தினமும் இடைவிடாமல் தஹஜ்ஜுத் தொழுகையை தொழுது வந்தார்கள். ஜமாஅத்தான தொழுகையை மிகவும் பேணி வந்தார்கள். அன்னாரின் தொழுகையும் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் அதன் அழகு பொறாமை கொள்ளத்தக்கதாக இருந்தது. எப்பொழுதும் மிகவும் உருக்கத்துடனும், பணிவுடனும், நிதானமாகவும் தொழுது வந்தார்கள். கிலாஃபத்துடன் மிக அதிகமான அன்பு இருந்து வந்தது. ஒவ்வொரு குத்பாவையும் மிக மரியாதையுடன் அமர்ந்து கேட்டு வந்தார்கள். சிராலியோனின் கலாச்சாரத்திற்கேற்ப ஜமால் சாஹிப் அவர்கள் பல பிள்ளைகளை தமது வீட்டில் வளர்த்து வந்தார்கள். தனது செலவில் படிக்க வைத்தார்கள். அவர்களில் பலர் தற்போது நல்ல பணிகளில் உள்ளனர். மிகவும் மரியாதையுடனும் அன்புடனும் அன்னாரை நினைவு கூறுகின்றார்கள்.

நவீது கமர் முரப்பி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் ஜமாஅத்தின் திட்டங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெற்று வந்தார்கள். தனது பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தின் ஏனைய சான்றோர்களின் பெயரில் தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்களில் கூடுதல் தியாகங்களை செய்து வந்தார்கள். தனது சொந்த ஊரான ரோக்பூர் கிராமத்திற்கு அவர்கள் வரும்போதெல்லாம் பணிகளில் மும்முரமாக இருந்தபோதிலும் குறித்த நேரத்தில் பள்ளிவாசலுக்கு வந்து விடுவார்கள். பொதுவாக மக்ரிப் மற்றும் இஷாவிற்கு இடைப்பட்ட நேரத்தில் மக்களுக்கு ஜமாஅத்தின் போதனைகளை எடுத்துரைப்பார்கள்.

குறிப்பாக அஹ்மதிய்யா கிலாஃபத்தின் முக்கியத்துவம் மற்றும் அருட்கள் அதனுடன் தொடர்பு வைப்பது என்ற தலைப்பில் மிகவும் அழகிய முறையில் மக்களுக்கு புரிய வைப்பார்கள். எல்லாரிடமும் அன்னார் நேசமிக்க தொடர்பு வைத்திருந்தார்கள். அன்னாரின் மரண செய்தியை அறிந்து அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாத ஒவ்வொருவரும் கண்ணீர் வடித்தார்கள். இதன் காரணமாகவே அன்னாரின் ஜனாஸாவில் ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டிருந்தனர். அக்கம் பக்கத்திலிருந்து மட்டுமல்லாமல் நீண்ட நெடிய பயணம் செய்து மக்கள் ஜனாஸாவில் கலந்து கொண்டார்கள்.

மர்ஹூம் அவர்களுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். முதலாவது மனைவியிடமிருந்து பிரிந்திருந்தார்கள். ஆனால் அன்னார் மூலமே சந்ததிகள் உள்ளன. இரண்டு மகள்களும், இரண்டு மகன்களும் உள்ளனர். ஒரு மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. மகள் ஆஸ்திரேலியாவில் இருக்கின்றார். மற்றவர்கள் கானாவில் இருக்கின்றார்கள். இரண்டு பிள்ளைகள் கானாவிலும், ஒருவர் சிரோலியோனிலும் படித்து வருகின்றனர். இரண்டாவது மனைவி மூலமாக அன்னாருக்கு எந்த பிள்ளையும் இல்லை.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்யும் நற்பேறை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய அமத்துஸ் ஸலாம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் முன்னாள் நாஸிம் ஜாயிதாத் மற்றும் ரப்வாவின் சட்ட ஆலோசகராக இருந்த மர்ஹூம் மதிப்பிற்குரிய சவுத்ரி சலாஹுத்துன் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். மர்ஹூமா அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அன்னாரின் கணவராகிய சவுத்ரி சலாஹுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய ஹஸ்ரத் ஹம்னா பீபீ சாஹிபா ஆகியோரின் மகன்வழிப் பேரன் ஆவார்கள். மர்ஹூமின் பாட்டனாரும், பாட்டியும் இருவரும் சஹாபியாக இருந்தார்கள். சஹாபாக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

அன்னாரின் மகன் நயீமுத்தீன் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: எனது தாயாரின் வாழ்க்கையில் நினைவு கூறத்தக்க விஷயமாக அமைந்துள்ள முக்கிய அம்சம் என்னவென்றால், எனது தாயாருக்கு எங்களது தொழுகை பற்றி மிகவும் அக்கறை இருந்தது. இது அன்னாருடைய மிக வலிமையான செயல் முறையாக இருந்தது. அன்னார் மிகவும் கடுமையாக அதனை செயல்படுத்தி வந்தார்கள். இந்த செயல் முறை மிகவும் உறுதிவாய்ந்ததாக இருந்தது. எங்களது வீடு செயல் ரீதியில் தங்கும் விடுதியின் வடிவில் இருந்தது. ஏராளமான எங்களது உறவினர்கள் கல்வியின் நோக்கத்திற்காக எங்களது வீட்டில் தங்கி வந்தார்கள். பல பல ஆண்டுகள் வரை அவர்கள் தங்கியிருந்தார்கள். தாயார் மர்ஹூமா அவர்கள் அன்பர்கள் அனைவரும் தொழுகையை எல்லா வகையிலும் பேணும்படி குறிப்பான கவனம் செலுத்தி வந்தார்கள். அனைத்து பிள்ளைகளுக்கும் சுயமே திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்து வந்தார்கள். பெரிய பிள்ளைகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்து வந்தார்கள்.

எனது வாழ்க்கையில் ஆழ்ந்த தாக்கத்தை விட்டுச் சென்ற அன்னாரின் இரண்டாவது பண்பு என்னவென்றால், அன்னார் தனது வீட்டில் தங்கிய அனைவருக்கும் சாத்தியமான அனைத்து எளிமையையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முயற்சி செய்து வந்தார்கள். ஒரு நாள் பணிப்பெண் விடுமுறை எடுத்து விட்டால் பிள்ளைகளின் துணிகளையும் துவைப்பதை அன்னார் ஒருபோதும் இழிவாக கருதியதில்லை. தனது பிள்ளைகள் மற்றும் மற்ற பிள்ளைகளின் துணிகளையும் துவைத்து வந்தார்கள். மர்ஹூம் தந்தை அவர்கள் பெரும்பாலும் ஜமாஅத்தின் பொறுப்புகளின் காரணமாக ரப்வாவில் தங்கியிருக்கவில்லை. தாயார் அனைத்து விருந்தினர்களையும் விருந்து உபசரிப்பு செய்வதில் எந்தக் குறைவும் வைக்கவில்லை. நான் மூத்த மகனாக இருந்தேன். எனவே விருந்தினர்களை சரியான முறையில் நான் உபசரிக்கின்றேனா என்பதை அன்னார் கண்காணித்து வந்தார்கள்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: எங்களது தந்தைவழிப் பாட்டியும், தாய்வழிப் பாட்டியும் பெரும்பாலும் எங்களது வீட்டிலேயே நீண்ட காலம் தங்கியிருந்தார்கள். இறை அருளால் நாங்கள் ஆறு சகோதர, சகோதரிகள் இருந்தோம். பெரும் எண்ணிக்கையில் குடும்பத்தின் பிள்ளைகளும் எங்களது வீட்டில் கல்விக்காக தங்கியிருந்தனர். ஆயினும் இந்த அனைத்து சூழலுக்கு மத்தியிலும் அன்னார் இந்த இரண்டு முதியவர்களுக்கும் நீண்ட காலம் மிக அழகிய முறையில் தொண்டாற்றி வந்தார்கள். ஜலஸா ஜாலானாவின் சந்தர்ப்பத்தில் எந்த மிகைப்படுத்துதலுமின்றி கூறுகின்றேன். 80,90 விருந்தினர்கள் வீட்டில் இருந்து வந்தனர். அவர்கள் தங்குவதற்கும் உண்ணுவதற்கும் ஏதுவாக வீட்டில் டெண்ட் அடித்து ஏற்பாடு செய்திருந்தார்கள். கிராமத்திலிருந்து படிப்பிற்கான ஏற்பாட்டையும் செய்திருந்தார்கள். தாயும் தந்தையும் இருவரும் இணைந்து இந்த அனைத்து ஏற்பாடுகளையும் மிக அன்புடனும், மன மகிழ்ச்சியுடனும், திறந்த மனதுடனும் செய்து வந்தார்கள். ஒவ்வொரு அன்பரும் அன்னாரின் அன்பு மற்றும் விருந்து உபசரிப்பை குறிப்பிட்டு வருகின்றனர்.

அன்னாரின் ஒரு மருமகன் எழுதியுள்ளார்: நான் மர்ஹூமாவின் வீட்டில் தங்கி கல்வி பயின்று வந்தேன். அக்காலத்தில் காலையில் தயார் செய்த ரொட்டியை இரவிலும், இரவில் தயார் செய்த ரொட்டியை காலையிலும் அன்னார் ஒருபோதும் எனக்கு கொடுத்தது கிடையாது. மாறாக, காலை உணவிற்காக சுட சுட ரொட்டியை ஆயத்தம் செய்து தருவார்கள். அன்னியர்களின் பிள்ளை என்ற எந்த பாகுபாடும் இல்லாமல் தனது பிள்ளை போன்று என்னை கவனித்து வந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் அன்பும், முன்மாதிரியான கட்டுப்படுதலின் தொடர்பையும் வைத்திருந்தார்கள். அன்னார் எங்களது நாடி நரம்புகளிலும் அதுபோன்ற உணர்வுகளையும் அன்பையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

அன்னாரின் மருமகள் நபீலா நயீம் சாஹிபா கூறுகின்றார்கள்: மர்ஹூமா

*(தொடர்ச்சி 1 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad